சேலம் மாநகராட்சியின் 10 எண்ணிக்கையிலான அம்மா உணவகங்களின் உணவுப்பொருட்கள் விற்பனை மூலம் 637–நாட்களுக்கு ரூ.44.29 இலட்சம் வருவாய் பெறப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் நிதி பற்றாக்குறை அரசால் ஆணையிடப்பட்டவாறு சேலம் மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து ஈடு செய்யப்பட்டு வரப்படுகிறது.

மேலும் அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.26.09.2014ன்படி, சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.29ல் அமைந்துள்ள அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புதிய அம்மா உணவகம் ஒன்று ரூ.50.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தனிக்குடிநீர் திட்டம் மதிப்பீடு ரூ.32,054.00 இலட்சம்

சேலம் மாநகராட்சி பகுதி பொதுமக்களுக்கு 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. இது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு போதுமான அளவு இல்லாததாலும் குடிநீர் வினியோகத்தினை சீரமைக்கும் பொருட்டும் மாநகர மக்களின் நலன் கருதியும் சேலம் மாநகராட்சிக்கு என தனியாக தனிக்குடிநீர் திட்டத்தினை செயல்படுத்திட ரூ.32,054.00 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதியினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண். 57 நாள் 11.06.2012ன் மூலம் வழங்கப்பட்டது.

தனிக்குடிநீர் திட்டம் நிலை ஒன்றுக்கான திட்டப்பணிகளை விரைவுபடுத்தி கடந்த 28.02.2014 ஆம் தேதி முடிக்கப்பட்டு முதல் சோதனை ஓட்டம் துவங்கப்பட்டது. தற்போது நாள்தோறும் 102 எம்எல்டி குடிநீர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, 2 முதல் 5 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நிலை ஒன்றுக்காக இதுவரை ரூ.17,966.00 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு உண்டான நிதி ஆதாரங்களில் மாநகராட்சி தனது பங்குத் தொகையாக ரூ.3500.00 இலட்சத்தினை செலுத்த வேண்டும் என அனுமதிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் அரசாணை எண்.13, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.சி.2) நாள்.12.01.2015–ல் ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டத்தின் (IUDM) கீழ் ரூ.3058.00 இலட்சம் வட்டியில்லா கடனாக மூன்று ஆண்டுகளுக்குள் திருப்பி செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

தனிக்குடிநீர் திட்டம் நிலை இரண்டில் மாநகரப் பகுதியில் புதியதாக 22 மேல் நிலை நீர் தேக்கத்தொட்டிகள் கட்டும் பணியும், 68.00கி.மீ நீளத்திற்கு குடிநீர் பிரதான முக்கிய குழாய்களும், 165.00கி.மீ நீளத்திற்கு பகிர்மான குழாய்களும் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் நாளது தேதி வரை 9 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளும், 38.00 கி.மீ நீளத்திற்கு குடிநீர் பிரதான முக்கிய குழாய்கள் மற்றும் 90.00கி.மீ நீளத்திற்கு பகிர்மானக்குழாய்கள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது. மீதம் உள்ள பணிகள் ஜுன் 2015க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

பாதாளசாக்கடை திட்டம் மதிப்பீடு ரூ. 14,939.00 இலட்சம்.

சேலம் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை ரூ. 14,939.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஆணை எண்: 60 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 23.02.2006–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் மூன்று சிப்பம் கழிவு நீர் குழாய் பதிக்கும் பணியாகவும், நான்கு சிப்பங்கள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிகளாகவும் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் கீழ்க்கண்டுள்ளவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| டி.என்.யு.டி. பி. மானியம் | – | 1000.00 இலட்சம் |
| டி.என்.யு.டி. பி. கடன் | – | 6054.00 இலட்சம் |
| மாநகராட்சி மற்றும் பொது மக்களின் பங்குத் தொகை | – | 7885.00 இலட்சம் |
| மொத்தம் | – | 14,939.00 இலட்சம் |

இதில் பொது மக்களின் பங்குத் தொகை திரட்டி பணியினை மேற்கொள்ளுதல் காலதாமதம் ஏற்படுவதால் அரசாணை எண்.13, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ.2) நாள்.11.01.2015–ல் ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (IUDM) ரூ.1000.00 இலட்சம் மானியமாகவும், ரூ. 6800.00 இலட்சம்

வட்டியில்லா கடனாக மூன்று ஆண்டுகளுக்குள் திருப்பி செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

கழிவுநீர் குழாய்கள் பதிப்பதற்கான சிப்பம் 1 மற்றும் 3ஆகிய பணிகளை ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்ததாரர் திருவாளர். பிஎஸ்விசிபிஎல்—பிபிஜபிஎல் (ஜேவி) என்ற நிறுவனம் பணியினை செய்யாமல் இருந்ததால் மேற்படி ஒப்பந்தத்தினை மாமன்றம் தனது தீர்மான எண்.98 மற்றும் 99 நாள்.11.07.2013ல் ரத்து செய்தது.

மேற்படி விடுபட்ட பணியினை மேற்கொள்ள உரிய ஒப்பந்தப்புள்ளிகள் 13.02.2014ல் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.சுப்பையா கன்ஸ்ட்டிரக்சன் கம்பெனி லிமிடெட்., அவர்களின் ஒப்பந்த புள்ளியினை ஏற்றுபணி ஆணை 06.03.2015ல் வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டுள்ளது.

மூன்று சிப்பங்களிலும் சேர்த்து மொத்தம் பதிக்கவேண்டிய 401.22 கி.மீட்டர் நீளத்தில் இதுவரை 179.00 கி.மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது.

மேலும் கழிவுநீர் குழாய்கள் மூலம் பெறப்படும் கழிவுநீரை சுத்திகரிக்க நவீன முறையிலான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (DESIGN BUILD OPERATE TRANSFER) வடிவமைத்து கட்டி இயக்கி பராமரித்து திரும்ப ஒப்படைக்கும் முறையில் நான்கு இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது.

அதன் விபரம் பின்வருமாறு.

- வெள்ளைக்குட்டை (13 எம்.எல்.டி) 95 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்திற்கு தயாராக உள்ளது.
- வண்டிப்பேட்டை (44 எம்.எல்.டி) 85 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.
- மான்குட்டை (35 எம்.எல்.டி) 95 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்திற்கு தயாராக உள்ளது
- அணைமேடு (6 எம்.எல்.டி) 80 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிகள் அனைத்தும் ஜுன் 2015க்குள் முடிக்கப்படும்.

பாதாளசாக்கடை திட்டத்தில் கழிவுநீர் குழாய் பதிக்க வெட்டப்படும் சாலையினை உடனடியாக பொதுமக்கள் உபயோகப்படுத்திடும் வகையில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநகராட்சி நிதி மற்றும் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப நிரந்தர தார் சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்க வெட்டப்பட்ட 179.00 கி.மீட்டர் சாலையில் 102.07 கி.மீ நீளத்திற்கு தார்சாலைகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. 2015–2016ம் ஆண்டில் 38.44 கி.மீ நீளத்திற்கு தார்சாலை அமைக்கப்படவுள்ளது. மீதமுள்ள பழுதடைந்த சாலைகள் நிதி ஒதுக்கீடு பெற்று படிப்படியாக சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வ.உ.சி. மார்க்கெட்

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.32ல் அமைந்துள்ள வ.உ.சி. மார்க்கெட் சுமார் 90 ஆண்டுகளுக்கு முன் துவங்கப்பட்டு மிக பழமை வாய்ந்த நாளங்காடியாக உள்ளது. தற்சமயம் மேற்படி நாளங்காடிகள் பயன்படுத்தமுடியாமல் பழுதடைந்துள்ளதால், பராமரிப்பு பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

தற்போது, மேற்படி பழுதடைந்த நாளங்காடிகளை முழுமையாக இடித்து, அப்புறப்படுத்தி, நவீன முறையில் காய்கறி நாளங்காடி, பூக்கள் நாளங்காடி, இறைச்சி நாளங்காடி, குளிர் பதனக் கிடங்குகள் மற்றும் வாகன நிறுத்தத்துடன் கூடிய நவீன வசதிகளுடன், புதிய நாளங்காடிகள் கட்ட ரூ.1500.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உரிய நிதி ஒதுக்கீடு வேண்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

# பொதுத் திட்டங்கள்

**சேலம் மாநகராட்சி புதிய மைய அலுவலகக் கட்டிடம் :**

**சேலம் மாநகராட்சிக்கு ஏற்கனவே உள்ள பழைய அலுவலகக் கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி அதே இடத்தில் 2012–2013 ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் புதிய மைய அலுவலகம் கட்டும் பணிக்கு திட்ட மதிப்பீடு தொகை ரூ.700.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்பொழுது கீழ்தளம், தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கு மேற்கூரை அமைக்கப்பட்டு விரைவாக பணிகள் நடைபெற்று வருகிறது.**

**இந்நிலையில் தற்பொழுது 2014–2015ஆம் ஆண்டில் இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.800.00 இலட்சங்களில் தயார் செய்யப்பட்டு மாமன்றம் தனது தீர்மானம் எண். 29 நாள்.12.06.2014ல் அனுமதி வழங்கியதிற்கிணங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி உரிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. நிதி கிடைக்கப் பெற்றதும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.**

**புதிய கட்டுமான பணிகள் :**

**2014–2015ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டும் பணிக்கு அரசு மானியமாக ரூ.300.00 இலட்சமும் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.16.00 இலட்சமும் சேர்த்து மொத்த மதிப்பீடு தொகை ரூ.316.00 இலட்சத்தில் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.**

**2014–2015ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.22ல் சிவதாபுரம் பகுதியில் புதிய கழிப்பிடம் கட்டும் பணிக்கு அரசு மானியம் ரூ.20.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.8.50 இலட்சமும் சேர்த்து மொத்த மதிப்பீடு தொகை ரூ.28.50 இலட்சத்தில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.**

**2014–2015ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் சேலம் மாநகராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, தனிக்குடிநீர் திட்டத்தில் கோம்புரான்காடு பகுதியில் உள்ள மின் மோட்டாருக்கு புதிதாக வி.எப்.டி**

(VFD) அமைக்கும் பணிக்கு அரசு மானியமாக ரூ.480.00 இலட்சமும், மாநகராட்சியின் பொது நிதியின் கீழ் ரூ.20.00 இலட்சமும் சேர்த்து ஆக மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.500.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

குடிநீர் விநியோகம் :–

சேலம் மாநகராட்சியில் உள்ள 60 கோட்டங்களுக்கும் தனிக்குடிநீர் திட்டம் மூலம் 102 MLD குடிநீரும், மேட்டூர் நங்கவள்ளி குடிநீர் திட்டத்தின் மூலம் 10 MLD குடிநீரும் ஆக மொத்தம் தினசரி 112 MLD குடிநீர் பெறப்பட்டு, பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பாதுகாக்கப்பட்ட குடிநீர் 2 முதல் 5 நாட்கள் இடைவெளியில் நபர் ஒன்றுக்கு, நாள் ஒன்றுக்கு, 135 லிட்டர்கள் வீதம் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகிறது. நாளது தேதி வரை 96,080 எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, மாநகராட்சிப் பகுதியில் 3041 எண்ணிக்கையிலான ஆழ்துளைக் கிணறுகள் உள்ளது. இதில் 964 எண்ணிக்கை கை பம்புகளுடன் கூடியதும், 2077 எண்ணிக்கை விசை பம்புகளுடன் உள்ளது. இதன் மூலம் தினந்தோறும் 2.40 MLD தண்ணீர் மக்களின் பயன்பாட்டிற்கு விநியோகம் செய்யப்படுகிறது.

தெரு விளக்கு :

சேலம் மாநகராட்சி பகுதியில் மொத்தம் 28,690 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் கீழ்கண்டுள்ளவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | குழல் விளக்குகள் | : | 19,193 | எண்ணிக்கைகள் |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள் | : | 8,004 | எண்ணிக்கைகள் |
| 3. | T5 விளக்குகள் | : | 1,034 | எண்ணிக்கைகள் |
| 4. | பாதரச ஆவி விளக்குகள் | : | 259 | எண்ணிக்கைகள் |
| 5. | சோலார் விளக்குகள் | : | 95 | எண்ணிக்கைகள் |
| 6. | உயர் கோபுர மின் விளக்குகள் | : | 15 | எண்ணிக்கைகள் |
| 7 | இதர வகை விளக்குகள் | : | 90 | எண்ணிக்கைகள் |
| | மொத்தம் | : | 28,690 | எண்ணிக்கைகள் |

சேலம் மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணி தற்போது எஸ்கோ (ESCO) நிறுவனமான திருவாளர்கள் ஆகாஷ் அசோசியேட்ஸ் நிறுவனத்தினரால் மின்சார சேமிப்பு திட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அம்மாபேட்டை, கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தில் உள்ள 6975 எண்ணிக்கையிலான 40 வாட்ஸ்

குழல் விளக்குகளை அப்புறப்படுத்தி 20 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் அறிக்கையாண்டில் சூரமங்கலம் மற்றும் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்தில் உள்ள 40 வாட்ஸ் குழல் விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக மாற்றும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

சாலைகள் :

சேலம் மாநகராட்சியில் 758.85 கி.மீ. தார்சாலை, 12.80 கி.மீ. ஜல்லி சாலை, 57.78 கி.மீ. சிமெண்ட் சாலை மற்றும் 19.20 கி.மீ. மண் சாலைகள் என மொத்தம் 848.63 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தற்போது மாநகரில் தனிக்குடிநீர் திட்டம், பாதாளசாக்கடைத் திட்டம், மின்சார வாரியத்தின் மூலம் கேபிள் பதிக்கும் திட்டம் ஆகிய திட்டங்களால், ஏற்படும் சாலைப் பழுதுகளை சீர் செய்ய இந்த நிதியாண்டில் பொது நிதியின் கீழ் 40 எண்ணிக்கையிலான பணிகள் 6.33 கி.மீ. நீளத்திற்கு எடுக்கப்பட்டு ரூ. 100.70 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் ( TURIP)

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்ட பகுதியில் பழுதடைந்த சாலைகளை சீரமைத்திட தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2013–2014 ஆண்டிற்கு, ரூ.800.00 இலட்சங்கள் அரசிடமிருந்து மானயமாக பெறப்பட்டு 45 பணிகள் 15.182 கி.மீ. நீளத்திற்கு ரூ.953.80 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

2014–2015 ஆண்டிற்கு 52 பணிகள் 18.127 கி.மீ. நீளத்திற்கு ரூ.1269.95 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 30.01.2015ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 06.03.2015 ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் துவங்கும் நிலையில் உள்ளது.

ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டம் ( IUDM) :

ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (IUDM) 2013–2014ஆம் ஆண்டிற்கு மொத்த மதிப்பீடு ரூ.2211.00 இலட்சத்தில் அரசு மானியமாக ரூ.1549.00 இலட்சமும் மாநகராட்சி பங்களிப்பாக ரூ.662.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 19.130 கி.மீ நீளத்திற்கு 11 சாலைகளை சீரமைக்கும் பணிகள் ரூ.1350.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 11.625 கி.மீ. நீளத்திற்கு 4 வடிகால் அமைக்கும் பணிகள் ரூ. 771.00 இலட்சம் மதிப்பீட்டிலும் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மேற்படி திட்டத்தில் வீராணம் திடக்கழிவு கிடங்கில் உணவுக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரித்திட ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

2014–2015ஆம் ஆண்டிற்கு வடிகால் பணிகள் 18.369 கி.மீ. நீளத்திற்கும் சாலை பணிகள் 17.933 கி.மீ. நீளத்திற்கும் மொத்தம் 27 பணிகளுக்கு ரூ.1799.49 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

பிளாஸ்டிக் தார்சாலைகள் அமைக்கும் திட்டம்:

சேலம் மாநகராட்சியில் 2014–2015 ஆம் ஆண்டில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார்சாலை அமைக்கும் திட்டத்தில் மொத்தம் 4 பணிகள் 2.338 கிலோமீட்டர் நீளத்திற்கு அமைத்திட ரூ.157.60 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றதும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் :

சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்திடும் வகையில் சேலம் மாநகரத்தில் தினந்தோறும் சேகரம் ஆகும் சுமார் 350 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை விஞ்ஞான முறையில் அழிக்க ஏதுவாக செட்டிச்சாவடி பகுதியில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டி இயக்கி மீண்டும் மாநகராட்சியிடம் ஒப்படைக்கும் திட்டத்தின் கீழ் (BOOT) திருவாளர்கள். குஜராத் என்விரோ புரடக்ஷன் பிரைவேட் லிமிடெட்., திருவாளர்கள். பூஜா எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் மற்றும் திருவாளர்கள். ஹேஞ்சர் பையோடெக் பிரைவேட் லிமிடெட்., ஆகிய நிறுவனங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டது.

மேற்படி நிறுவனம் நல்ல முறையில் பணி மேற்கொள்ளும் போது எதிர்பாராதவிதமாக 16.03.2014 ம் தேதியில் தீ விபத்து ஏற்பட்டு மேற்படி தொழிற்சாலை (Plant) முழுவதும் எரிந்து மீண்டும் இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது.

அடுத்தகட்ட நடவடிக்கையாக சேலம் மாநகராட்சி பகுதியில் இருந்து சேகரமாகும் திடக்கழிவுகள் முதல்நிலை சேகரம், இரண்டாம் நிலை சேகரம் செய்யப்பட்டு செட்டிச்சாவடியில் உள்ள ஆலையில், விஞ்ஞான முறையில் பிரித்து எடுக்கப்பட்டு, எரியும் தன்மையுடைய திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு (Waste to Engergy) மாநகராட்சி உபயோகத்திற்கு பயன்படுத்திடும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்துடன் மேலும், முதல்நிலை சேகரம் மற்றும் இரண்டாம் நிலை சேகரம் போன்றவற்றிற்கு தேவையான வாகனங்கள் மற்றும் கட்டமைப்புகள் ஏற்படுத்திட திட்ட மதிப்பீடு ரூ.12,739.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015–2016ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்தும், நிர்வாக அனுமதி வேண்டியும் அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி :**

**எரிவாயு தகன மேடை:**

சேலம் மாநகராட்சிக்கு உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், 2012–2013ஆம் ஆண்டிற்கு சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண். 28–ல் செவ்வாய்ப்பேட்டை இடுகாட்டில் புதியதாக எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிக்கு அரசு மானியமாக ரூ.50.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.80.00 இலட்சமும் சேர்த்து மொத்தம் ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

2013–2014ஆம் ஆண்டிற்கு அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.44–ல் எருமாபாளையம் குப்பைமேடு அருகில் உள்ள மயானத்திற்கு அரசு மானியமாக ரூ.100.00 இலட்சமும், மாநகராட்சியின் பொது நிதியின் கீழ் ரூ. 50.00 இலட்சமும் சேர்த்து மொத்தம் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி மேற்கொள்ள, பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அறிக்கையாண்டில் இந்த பணி முழுமையாக முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

மயானம் மேம்பாடு செய்தல்:

சேலம் மாநகரில் 63 எண்ணிக்கையிலான மயானங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் எருமாபாளையம் மற்றும் கொண்டலாம்பட்டி ஆகிய மயானங்களை மேம்படுத்த அரசு மானியமாக தலா ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அறிக்கையாண்டில் முடிக்கப்பட உள்ளது.

**மக்கும் கழிவுகளில் இருந்து எரிவாயு தயார் செய்தல்:**

காக்காயன் மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும் எருமாபாளையம், செவ்வாய்பேட்டை மயானங்களில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட எரிவாயு தகன மேடைகளின் பயன்பாட்டிற்கு தேவையான எரிவாயு பயோமித்தேனேஷன் பிளாண்ட் முறையில் தயார் செய்ய உரிய கட்டமைப்பு ஏற்படுத்திட திட்டமிடப்பட்டு செவ்வாய்பேட்டை மயானத்திற்கு ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்டதும், எருமாபாளையம் மயானத்திற்கு ரூ.160.00 இலட்சம் மதிப்பீட்டில், 10 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்டதும், காக்காயன் மயானத்திற்கு ரூ.160.00 இலட்சம் மதிப்பீட்டில் 10 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்டதும் அமைத்திட வேண்டி உரிய முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலையினை ஒழிக்கும் திட்டம் :**

திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலையினை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் 2013–2014ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் அரசு மானியமாக ரூ.45.00 இலட்சமும், மாநிலஅரசு நிதியின் கீழ் ரூ.35.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.0.40 இலட்சமும் சேர்த்து ஆக மொத்த மதிப்பீடு ரூ.80.40 இலட்சத்தில், சேலம் மாநகராட்சி பகுதியில் 4 இடங்களில் "நம்ம டாய்லட்" யுனிவர்சல் டிசைன்படி நவீன கழிப்பிடம் கட்டும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

2014–2015ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் நான்கு வார்டு அலுவலக பகுதியில் உள்ள பழுதடைந்துள்ள பழைய 72 கழிப்பிடங்களை ரூ. 201.32 இலட்சத்தில் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சுரங்க நடைபாதைக்கு மாற்றுப் பணி**

சேலம் மாநகராட்சி ஓமலூர் பிரதான சாலையின் குறுக்கே மத்திய பேருந்து நிலையத்தின் எதிரில் சுரங்க நடைபாதை அமைக்க 2012–13ஆம் ஆண்டின் நகர் மற்றும் ஊரமைப்புத்துறை திட்ட நிதியுதவியுடன் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.115.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் நெடுஞ்சாலை துறையினரால், 5 ரோடு சந்திப்பு முதல் 4 ரோடு சந்திப்பு வரை 2350 மீட்டர் நீளத்திற்கு சாலை மேம்பாலம் (Road over Bridge) அமைக்கப்படவுள்ளதால்,

சுரங்க நடைபாதை அமைக்கப்பட்டால் அது பயனற்றும், மேம்பால கட்டுமான பணிகளுக்கு இடையூராக அமையும் என்பதால், சுரங்க நடைபாதை திட்டத்திற்கு மாற்றாக அதே மத்திய பேருந்து நிலையத்தின் தென் மேற்கில் மெய்யனூர் பிரதான சாலை சந்திப்பு முதல் மத்திய பேருந்து நிலையம் வரையில் சாலையின் இருபுறமும் பாதசாரிகள் நடைபாதை அமைக்கவும், சாலையின் மத்தியில் அடித்தளக் கட்டுமானத்துடன் கூடிய தெரு மின் விளக்குகள் அமைக்கவும், மதிப்பீடு ரூ.**115.00** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி வழங்க வேண்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கும் இதற்கான நிதியினை நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் சாலை மற்றும் புராதான நகர் மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கிடவும் திட்ட முன் மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாதிரி இணைப்பு சாலை **- F2 - F2** சாலை

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.**14**ல் அமைந்துள்ள செரிரோடு முதல் பெரமனூர் மெயின்ரோடு வரையில் **550** மீட்டர் நீளம் மற்றும் **40** அடி அகலம் கொண்ட **-** F2 - F2 திட்ட சாலை அமைக்க திட்டமிடப்பட்டு அச்சாலையில் புதியதாக நடைபாதை, மழைநீர் வடிகால் அமைப்புகள் மற்றும் இரட்டை மின்விளக்குகளுடன் கூடிய சாலை மைய தடுப்புகள், சிறு பாலங்கள், வழிகாட்டி குறியீடுகள், தகவல் பலகைகள் மற்றும் ஒளிரும் விளக்குகள் ஆகியவைகளுடன் கூடிய மாதிரி சாலையாக ரூ.**400.00** இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கிட, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிதி வழங்க வேண்டி ஆணையாளர், நகர் மற்றும் ஊரமைப்புத் துறை, சென்னை அவர்களுக்கு திட்ட முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், சாலை அமைக்க **13** எண்ணிக்கை பயனாளிகளிடம் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி **13** பயனாளிகளுக்கு நில மதிப்பு தொகை சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் மூலம் வழங்க மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம் மூலம் நடவடிக்கையில் உள்ளது.

நவீன மீன்விற்பனை அங்காடி அமைத்தல் :

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.**19**, தர்மநகர் பகுதியில் ரூ.**100.00** இலட்சம் மதிப்பீட்டில் தேசிய மீன் வளர்ச்சி கழகம், ஹைதராபாத் அமைப்பின் மூலம் **90** சதவீதம் மானியத்துடன் புதிய நவீன மீன் விற்பனை நிலையம் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

தன்னிறைவுத் திட்டம் :

சேலம் மாநகராட்சி பகுதியில் 2013–2014ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 4 பணிகள் மொத்த மதிப்பீடு தொகை ரூ.77.66 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

சேலம் மாநகராட்சி பகுதியில் 2014–2015ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 3 பணிகள் ரூ. 56.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த பணிகள் அனைத்தும் 30.05.2015க்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மழைநீர் சேகரிப்புத்திட்டம் :

சேலம் மாநகராட்சி பகுதியில் உள்ள 1,87,220 எண்ணிக்கையிலான வரி விதிப்புகளில் 1,58,788 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. அதே போல் 681 அரசு அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள 27,751 எண்ணிக்கையிலான வீடுகளுக்கும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பொது நிதி :

2014–2015ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.4,603.21 இலட்சம் மதிப்பீட்டில் 341 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 44 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 297 பணிகளில் 226 பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 71 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது.

கல்வி நிதி :

சேலம் மாநகராட்சிப் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளை மேம்படுத்தும் வகையில் 2012–2013ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் ரூ.415.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 20 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டது.

2013–2014ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் ரூ.399.59இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 57 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டது.

சேலம் மாநகராட்சிப் பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளிகளில் ஸ்மார்ட் போர்டுகள் அமைத்து பள்ளிகளை மேம்படுத்தும் வகையில், 2014–2015ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் ரூ. 9.80 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 7 எண்ணிக்கையிலான ஸ்மார்ட் போர்டுகள் அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டது.

2014–2015ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் ரூ.229.45 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 14 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 6 பணிகள் முடிக்கப்பட்டது. மீதமுள்ள 8 பணிகள் நடைபெற்று வருகிறது.

குடிநீர் நிதி :

2014–2015ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் 24 பணிகள் ரூ.125.39 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 11 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 13 பணிகளில் 9 பணிகள் நடைபெற்று வருகிறது. 4 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கையில் உள்ளது.

வாகனங்கள்:

சேலம் மாநகராட்சியில் மாண்புமிகு மேயர், செயற்பொறியாளர்கள் (பொது) மற்றும் (திட்டம்) ஆகியோரின் அலுவலகப் பயன்பாட்டிற்கு புதிய வாகனங்கள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அம்மா மக்கள் சேவை மையம்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அம்மா மக்கள் சேவை மையம் அமைக்க அறிவிப்பு செய்துள்ளதினை தொடர்ந்து 2014–2015 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் சூரமங்கலம் மண்டலத்தில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் முதல் மாடி கட்டிடம், அஸ்தம்பட்டி மண்டலத்தில் ரூ.19.90 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம், அம்மாப்பேட்டை மண்டலத்தில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம், கட்ட நடவடிக்கையில் உள்ளது.

அங்கன்வாடி மையங்கள்

சேலம் மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள 121 அங்கன்வாடி மையங்களுக்கு 2013–2014ம் ஆண்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகளுக்கான திட்டத்தின் மூலம் புதிய மின்இணைப்புகள் வழங்கிட ரூ.6.78 இலட்சமும் மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து ரூ. 2.87 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 9.65 இலட்சம் செலவினம் செய்யப்பட்டது.

மகப்பேறு மருத்துவமனை :

2014–2015ம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.36ல் கனகசபாபதி தெருவில் மகப்பேறு மருத்துவமனை கட்டும் பணிக்கும், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.50ல் காந்தி நகர் பகுதியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிக்கும் அரசு மானியமாக தலா ரூ.50.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் தலா ரூ.10.00 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

கட்டிட அனுமதி

சேலம் மாநகராட்சி 4 வார்டு அலுவலகங்களில் 2014–15ம் ஆண்டில் 1044 கட்டிட விண்ணப்பங்கள் பெறப்பட்டு 951 இனங்களுக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. இதன்மூலம் ரூ.50.58 இலட்சம் வருவாய் பெறப்பட்டுள்ளது.

அனுமதி பெறாத கட்டிடங்களின் மீது நீதிமன்ற நடவடிக்கை:

சேலம் மாநகராட்சி 4 வார்டு அலுவலகங்களில் அனுமதிபெறாத கட்டிடங்களுக்கு 2014–15ம் ஆண்டில் சேலம் மாநகராட்சி சட்டம் 1994, பிரிவு 274, 283, 296 (1) (2), 297 மற்றும் 447ன் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் 321 இனங்களுக்கும், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்தில் 1630 இனங்களுக்கும், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்தில் 146 இனங்களுக்கும், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தில் 121 இனங்களுக்கும் ஆக மொத்தம் 2218 இனங்களுக்கு தற்காலிக ஆணை மற்றும் உறுதி செய்யும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நீதி மன்றம் மூலம் வழக்கு தொடரப்பட்டு சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் 137 இனங்களுக்கும், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்தில் 624 இனங்களுக்கும், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்தில் 54 இனங்களுக்கும், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தில் 33 இனங்களுக்கும் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு அதன் மூலம் ரூ.8.48 இலட்சம் வருவாய் பெறப்பட்டுள்ளது.

போக்குவரத்து நகர்வு திட்டம் :

சேலம் மாநகராட்சி மற்றும் சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் பகுதிகளில் வளர்ச்சி மற்றும் எதிர்கால தேவையினை கருத்திற்கொண்டு ஒருங்கிணைந்த போக்குவரத்து நகர்வுத்திட்டம் (Comprehensive Mobility Plan ) தமிழ்நாடு நகர்புற நிதி மேம்பாட்டு கழகம் (TNUIFSL) அவர்களால் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு திட்ட ஆலோசகராக M/s. CMD Smith India Pvt.Ltd நிறுவனத்தினரை நியமனம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனம் சேலம் மாநகராட்சி மற்றும் சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டது. பின்னர் மாவட்ட

ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் பங்களிப்போர் கலந்தாலோசனை கூட்டம் 20.12.2013, 27.02.2014, 25.06.2014 மற்றும் 24.12.2014 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய பாரளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், லாரி உரிமையாளர் சங்கம், பேருந்து உரிமையாளர்கள் சங்கம், வட்டார போக்குவரத்து அலுவலர், உறுப்பினர் செயலர் சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தலைமை பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம், வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இது குறித்து விரிவான திட்ட அறிக்கை திட்ட ஆலோசகர்களால் நிறுவனத்திற்கு சமர்பிக்கப்பட நடவடிக்கையில் உள்ளது.

பூங்கா மற்றும் விளையாட்டு திடல் மேம்பாட்டு திட்டம்:

சேலம் மாநகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதில் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் மேம்பாட்டு திட்டம் 2014–2015ன் கீழ் 5 எண்ணிக்கையிலான பூங்காக்கள் ரூ.138.30 இலட்சம் மதிப்பீட்டில் நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ள, நிதி ஒதுக்கீடு செய்திடவும், நிர்வாக அனுமதி வழங்கிட வேண்டி திட்ட முன்மொழிவுகள் மாமன்ற தீர்மானம் எண்.280 நாள்: 23.01.2015ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் மூலமாக தலைவர், நகர் மற்றும் ஊரமைப்பு துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் கீழ்கண்ட பூங்காக்களில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

| வ. எண் | கோட்டம் எண் | பணியின் பெயர் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 3 | சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண் 3 ல் அசோக் நகர் பூங்கா மேம்பாட்டு பணி | 13.50 |
| 2 | 5 | அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண். 5 ல் சோனா நகர் பூங்கா மேம்பாட்டு பணி | 29.90 |
| 3 | 8 | அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண். 8 ல் கம்பர் தெரு பூங்கா மேம்பாட்டு பணி. | 19.90 |
| 4 | 9 | அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண். 9 எஸ்.கே. டவுன்சிப் பூங்கா மேம்பாட்டு பணி. | 25.00 |
| 5 | 60 | கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண். 60 கோவிந்தம்மாள் நகர் (அழகு நகர்) பூங்கா மேம்பாட்டு பணி. | 50.00 |
| | | மொத்தம் | 138.30 |

பிளாஸ்டிக் ஒழிப்பு

சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்: 144, நாள்.25.07.2012ன்படி சேலம் மாநகர எல்லைக்குள் பிளாஸ்டிக்கினால் ஆன கை பைகள், டீ கப்புகள், பிளாஸ்டிக் கவர்களில் அடைத்து விற்கும் பான்பராக், குட்கா மற்றும் வாசனை புகையிலை போன்ற பொருட்கள் மற்றும் இதர பிளாஸ்டிக் பொருட்களை தயாரிக்கும் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு அபராதம் விதித்து பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்தினை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. அதன்படி சேலம் மாநகராட்சியில் மாநகர நல அலுவலர் தலைமையில் வார்டு அலுவலக உதவி ஆணையர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கொண்ட குழுவினர் ஆய்வுசெய்து பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்தும் பிளாஸ்டிக்பை விற்பனையாளர்களுக்கு அபராதம் விதித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி சேலம் மாநகராட்சியின் நான்கு வார்டு அலுவலகங்களிலும், மேற்கொள்ளப்பட்ட பிளாஸ்டிக் தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் ரூ.1,08,661/– அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மொத்தம் 2,225 கிலோ அளவிலான பிளாஸ்டிக் பைகள் விற்பனையாளர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டும், நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும் திடக்கழிவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தினசரி குப்பைகளை தரம் பிரித்து வாங்கப்பட்டதன் வாயிலாக இதுவரை 5 டன் அளவிலான பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சியில் இவ்வாறாக சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பறிமுதல் செய்யப்படும் பிளாஸ்டிக் பொருட்களை கொண்டு தார்சாலை அமைக்கும் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுவரை 2011–12 ம் ஆண்டில் 69 பணிகள் ரூ. 1423.50 இலட்சங்கள் மதிப்பீட்டில் 36.304 கி.மீ நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. 2012 –13ம் ஆண்டில் 80 பணிகள் ரூ.1615.14 இலட்சங்கள் மதிப்பீட்டில் 29.698 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் 2013 –14ம் ஆண்டில் 60 பணிகள் ரூ.2418.70 இலட்சங்கள் மதிப்பீட்டில் 36.658 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சாலைகளில் 165.54 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறாக 2011–12 முதல் 2013–14 வரையிலான காலங்களுக்கு பிளாஸ்டிக் தார்சாலை அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இது போன்ற நடவடிக்கைகள் இனி வரும் நிதியாண்டிலும் மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மட்டும் பொது மக்களிடையே பிளாஸ்டிக் ஒழிப்பு / தவிர்ப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்த, விழிப்புணர்வு கையேடுகள், துண்டு பிரசுரங்கள் ஆகியன 2 இலட்சம் எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. வணிகம் மற்றும் தொழில்நிறுவனங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்தினை தவிர்த்தல் குறித்தான வாசகங்கள் மற்றும் படங்கள் அடங்கிய ஸ்டிக்கர்கள் 1.5 இலட்சம் எண்ணிக்கைகளில் அச்சிடப்பட்டு, ஒட்டப்பட்டு விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான செலவினம் ரூ.11.43 இலட்சம் சமுதாய மேம்பாட்டு நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை

அனைத்து தரப்பு மக்களுக்கும் நல்லதொரு நோயற்ற வாழ்வினை நல்கும் பொருட்டு சேலம் மாநகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் 2013–ம் ஆண்டில் 75 நபர்களுக்கும், 2014–ம் ஆண்டில் 18 நபர்களுக்கும், 2015–ம் ஆண்டில் 6 நபர்களுக்கும் டெங்கு காய்ச்சல் அறிகுறிகள் கண்டறியப்பட்டு சேலம் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட உரிய தொடர் நடவடிக்கையின் காரணமாக அனைவரும் குணப்படுத்தப்பட்டனர்.

மேலும் அரசு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அவ்வப்பொழுது அறிவுறுத்தப்பட்டதின்படி, தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள சேலம் மாநகராட்சியினை பொருத்தமட்டில் அனைத்து துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து 11 எண்ணிக்கையிலான சிறப்பு கொசுப்புழு ஒழிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்குழுவில் சேலம் மாநகராட்சி செயற்பொறியாளர்களை பொறுப்பு அலுவலர்களாகவும், மாமன்ற உறுப்பினர்களை செயல்தலைவர்களாகவும், நியமித்து மருத்துவ அலுவலர், உதவி ஆணையர்கள், உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் நகர்புற சுகாதார செவிலியர்கள், மருந்தாளுநர்கள், சமுதாய அமைப்பாளர்கள், மாநகராட்சி பொறியியல் பிரிவின் தொழில்நுட்ப உதவியாளர்கள், பணியாளர்கள், மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள்

ஆகியோரை உள்ளடக்கிய பணிக்குழு அமைக்கப்பட்டு அக்குழுவினருக்கு மாநகராட்சியில் உள்ள மொத்தம் 60 கோட்டப்பகுதிகளை ஒரு குழுவிற்கு 5 முதல் 6 கோட்டங்கள் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு அக்கோட்டப்பகுதிகளில் 7 நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்குழுவினருடன் செல்லும் மலேரியா பணியாளர்களின் துணையுடன் கொசுக்கள் முட்டையிடும் மழைநீர் தேங்கும் பகுதிகளான பழைய டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், சிமெண்ட் தொட்டிகள், உரல்கள் மற்றும் இதுபோன்ற மழைநீர் தேங்கும் அமைப்புடைய தேவையற்ற பொருட்களை அகற்றியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பணிக்கு சேலம் மாநகராட்சியில் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்த 4 எண்ணிக்கையிலான வாகன கொசுப்புகை தெளிப்பான் கருவிகள் மற்றும் 20 எண்ணிக்கையிலான கைப்புகை தெளிப்பான் கருவிகளுடன் கூடுதலாக 10 எண்ணிக்கையிலான கைப்புகை தெளிப்பான் கருவிகள் ரூ.6.27 இலட்சம் செலவினத்தில் கொள்முதல் செய்யப்பட்டு இப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றுடன் கீழ்கண்ட விபரப்படி கொசுப்புழு ஒழிப்பு மருந்து கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

| வ. எண் | கொசுஒழிப்பு பணிக்கு கொள்முதல் செய்யப்பட்ட கொசுப்புழு ஒழிப்பு மருந்து இராசயனத்தின் பெயர் | கொசுப்புழு ஒழிப்பு மருந்து அளவு | செலவினம் |
|---|---|---|---|
| 1. | டெமிபாஸ் 50EC | 800 லிட்டர் | ரூ.4,78,229/– |
| 2. | பைரத்திரம் | 2000 லிட்டர் | ரூ. 21,59,775/– |
| 3. | பையோலார்விசைடு | 1000 கிலோ | ரூ.11,65,000/– |

டெங்கு காய்ச்சல் சிறப்பு நோய்தடுப்பு நடவடிக்கையாக சேலம் மாநகராட்சியின் சித்த மருத்துவப்பிரிவின்கீழ் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு பொது மக்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டு வருகிறது.

**இவற்றுடன் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த சேலம் மாநகராட்சியால் கீழ்கண்டவாறு நடப்பாண்டில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| தெருமுனை பிரச்சார கலைநிகழ்ச்சிகள் | – 64 எண்ணிக்கைகள் |
| விழிப்புணர்வு பிரச்சார துண்டு பிரசுரங்கள் | – 1 இலட்சம் |
| டெங்கு காய்ச்சலை பரப்பும் கொசு உற்பத்தியாகும் சூழ்நிலைகள் மற்றும் அவற்றை கட்டுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த வண்ணப்படங்கள் அடங்கிய ஸ்டிக்கர்கள் | – 1.5 இலட்சம் |
| விழிப்புணர்வு பேரணிகள் | –4 எண்ணிக்கைகள் |
| பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார உறுதிமொழிகள் | –125 எண்ணிக்கைகள் |
| ஆட்டோ பிரச்சாரம் | –60 எண்ணிக்கைகள் |
| டெங்கு காய்ச்சலை பரப்பும் கொசு உற்பத்தியாகும் சூழ்நிலைகள் மற்றும் அவற்றை கட்டுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த வண்ணப்படங்கள் அடங்கிய பிளக்ஸ் பேனர்கள் | –180 எண்ணிக்கைகள் |
| டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வண்ணத் தொலைக்காட்சி பெட்டியுடன் கூடிய பிரச்சார வாகனம் | –1 எண்ணிக்கை |

மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக சேலம் மாநகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கையும் வீடு தோறும் கொசுப்புழு உற்பத்தியாகும் தண்ணீர் சேகாரமாகும் தேவையற்ற கலன்களின் எண்ணிக்கையும் கணிசமாக குறைந்துள்ளது.

| House Index (Average) | Container Index (Average) | Breteau Index (Average) |
|---|---|---|
| 1.59 | 0.23 | 2.24 |

சேலம் மாநகராட்சியில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அரசால் வழங்கப்படும் அறிவுரைகள் மற்றும் உத்திரவுகள் உடனுக்குடன் செயல்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது.

பன்றிகளை அப்புறப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

சேலம் மாநகராட்சி பகுதிகளில் தற்போது தீவிர நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஓர் அங்கமாக மாநகராட்சிப் பகுதிகளில் சுற்றித் திரியும் பன்றிகளை அப்புறப்படுத்தும் விதமாக மாநகராட்சி பகுதிகளில் பன்றிகளை வளர்க்கும் உரிமையாளர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு, தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 1939ன் கீழ் 58 நபர்களுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சேலம் மாநகராட்சியின் நான்கு வார்டு அலுவலகங்களிலும் சிறப்பு பணியாக மாநகரில் சுற்றித்திரியும் பன்றிகளை பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 68 பன்றிகள் பிடிக்கப்பட்டது.

சேலம் மாநகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பினை மீறி பன்றிகளை அப்புறப்படுத்திக் கொள்ளாத பன்றி வளர்ப்போர் சிலரிடம் நாளது தேதிவரை அபராதத் தொகையாக ரூ.12,000/– வசூலிக்கப்பட்டு அவர்களிடம் பன்றிகளை மாநகராட்சிக்கு வெளியே வளர்த்துக் கொள்ள உறுதிமொழி பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

பன்றி காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்

சேலம் மாநகராட்சி பகுதியில் பன்றி காய்ச்சல் ஏற்படும் சூழ்நிலைகள் மற்றும் பாதிக்கப்பட்டோர் எவருமே இல்லாத நிலையில் இக்காய்ச்சல் வெளி மாநிலங்களிலிருந்து வந்துச்செல்லும் மக்களால் மட்டுமே பரவிட வாய்ப்புள்ளதால் இதனை ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்திட ஏதுவாக சேலம் மாநகராட்சி புதிய பேருந்துநிலையம், சேலம் ஜங்சன், டவுன் இரயில் நிலையங்களில் சிறப்பு பன்றிக் காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இக்குழுவில் மருத்துவஅலுவலர், நகர்புற சுகாதார செவிலியர், மருத்துவ பணியாளர்கள் மற்றும் இரண்டு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் என பணியாளர்கள் நியமிக்கப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கென விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டும் மற்றும் பெரிய அளவிலான விழிப்புணர்வு பலகைகள் அமைக்கப்பட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

தெரு நாய்கள் ஒழிப்பு திட்டம்

சேலம் மாநகராட்சியில் தெரு நாய்களுக்கான இனப்பெருக்க அறுவை சிகிச்சை மையம் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வீராணம் சாலை பகுதியில் உள்ள குப்பை கிடங்கு அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ளது. இதில் தெருநாய்களுக்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவைசிகிச்சை மையம், மருத்துவ பரிசோதனை மையம், அறுவை சிகிச்சைக்கு முன்பும், பின்பும் நாய்களை அடைத்து பாதுகாக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள ரூ. 3.00 இலட்சம் மானியமாக பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.17.00 இலட்சம் மாநகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தெருநாய்களை பிடிப்பதற்காக தனியாக வடிவமைப்பு செய்யப்பட்டுள்ள வாகனம் ஒன்று ரூ.6.80 இலட்சத்தில் வாங்கப்பட்டுள்ளது. இந்த வாகனத்தினை வாங்க ரூ. 5.00 இலட்சங்கள் அரசுமானியமாக பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ. 1.80 இலட்சம் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து பெறப்பட்டுள்ளது.

போலியோ நோய் ஒழிப்பு திட்டம்

போலியோ என்கிற இளம்பிள்ளைவாத நோயை ஒழிக்கும் பொருட்டு கடந்த 17 வருடங்களாக தீவிர போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் நடைபெற்று வருகிறது. அதன்படி 2015ஆம் ஆண்டில் ஜனவரி 18–ம் தேதி, முதற்கட்டமாகவும், பிப்ரவரி 22–ம் தேதி இரண்டாம் கட்டமாகவும், 5 வயதிற்குட்பட்ட 79 ஆயிரம் குழந்தைகளுக்கு

போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாநகராட்சியினை பொருத்தமட்டில் கடந்த 12 வருடங்களாக ஒரு குழந்தைகூட போலியோ நோயினால் பாதிக்கப்படவில்லை என்பது பெருமைக்குரியதாகும்.

மருத்துவ மையங்களின் சேவைகள்

2014–15–ம் நடப்பு நிதி ஆண்டில் சேலம் மாநகராட்சி தாய் சேய் நல மையங்கள் மூலமாக 1527 பிரசவ சிகிச்சைகளும், மற்றும் பிரசவித்த தாய் மற்றும் சேய் ஆகியோருக்கு தொடர் மருத்துவ கண்காணிப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. சேலம் மாநகராட்சி மருந்தகங்கள், நகர்நல மையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் 2014–15–ம் ஆண்டில் புறநோயாளிகள் 2 இலட்சத்து 12ஆயிரத்து 450 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தொண்டை அடைப்பான், கக்குவான், இரணஜன்னி, மஞ்சள் காமாலை மற்றும் நிமோனியா போன்ற ஐந்து வகை நோய்களுக்கான தடுப்பு மருந்து 9785 குழந்தைகளுக்கும், காசநோய் தடுப்பு மருந்து 9985 குழந்தைகளுக்கும், தட்டம்மை தடுப்பு மருந்து 9650 குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு சீரிய முறையில் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் குடும்பநலத்துறை மூலமாக சேலம் மாநகராட்சி மருத்துவ அலுவலர்கள் மற்றும் நகர சுகாதார செவிலியர்களுக்கு குடும்ப நல சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அதன் வாயிலாக தற்காலிக குடும்ப நல கருத்தடை முறைகளான காப்பர்டி, சாதனம் 2200 தாய்மார்களுக்கு பொருத்தப்பட்டுள்ளது. 3825 தாய்மார்களுக்கு நிரந்தர கருத்தடை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு சிறப்பான குடும்ப நல சேவைகள் சேலம் மாநகராட்சியால் அளிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் கருவுற்ற ஏழை தாய்மார்களுக்கு பிரசவகால உதவிகள் வழங்கும் பொருட்டு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள கருவுற்ற தாய்மார்கள் மகப்பேறு காலத்தில் ஊட்டச்சத்தான உணவு உண்ணவும், வருவாய் இழப்பை ஈடுகட்டவும் முதல் இரண்டு கர்ப்பத்திற்கு ரூ.12,000/– நிதி உதவியினை ரூ.4000/– வீதம் மூன்று தவணைகளாக வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து கருவுற்ற ஏழை கர்ப்பிணிதாய்மார்களும், பிரசவ கால நிதியுதவி பெற ஏதுவாக ஒவ்வொரு தாய்மார்களின் கருவுற்ற விபரங்கள் கணினியில் பதியப்பட்டு ஒவ்வொரு தாய்மார்களுக்கும் கர்ப்ப பதிவு எண் வழங்கப்பட்டு, கர்ப்பகால பரிசோதனைகள் விவரம், பிரசவ குறிப்பு, தடுப்பூசி ஆகியவை பதியப்பட்டு ஒவ்வொரு தாய்மார்களுக்கும் தொடர் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பணியினை மேற்கொள்ள நடப்பு நிதிஆண்டில் தமிழக அரசால் 55 எண்ணிக்கையில் மடிக்கணினிகள் நகர சுகாதார செவிலியருக்கு வழங்கப்பட்டு ஒவ்வொரு தாய்மார்களின் கருவுற்ற விபரங்கள் கணினியில் பதியப்பட்டு ஒவ்வொரு தாய்மார்களுக்கும், கர்ப்ப பதிவு எண் விடுதலின்றி வழங்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2014–15 நடப்பு நிதியாண்டில் சேலம் மாநகராட்சிக்கு ரூ.600.08 இலட்சம் நிதி ஒதுக்கீடாக பெறப்பட்டு, நகர் நல மையங்கள் மூலமாக தகுதியுள்ள 12775 எண்ணிக்கையிலான ஏழை கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.500.11 இலட்சம் நிதியுதவி 3 தவணைகளாக வழங்கப்பட்டுள்ளது.

### ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்

வீட்டில் நடைபெறும் பிரசவங்கள் மூலம் ஏற்படும் சிக்கல்களை தடுப்பதற்கும், மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களை ஊக்குவிக்கவும், தாய் மற்றும் பச்சிளங்குழந்தைகளின் இறப்பை தடுப்பதற்கும், அரசு மருத்துவமனை, மாநகராட்சி அனைத்து நகர் நல மையங்கள், தாய்சேய் நல இல்லங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவிக்கும் ஏழை தாய்மார்களுக்கு பிரசவ கால உடனடி செலவுத்தொகையாக இத்திட்டத்தின் கீழ் தலா ரூ.600/– வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.8.10 இலட்சம் அரசு நிதியுதவியாக பெறப்பட்டு 1327 தாய்மார்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### அலோபதி மருத்துவமுறை

சேலம் மாநகராட்சியில் செயல்படுத்தப்படவுள்ள தேசிய நகர்புற சுகாதாரத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் 16 ஆரம்ப சுகாதார மையங்களுக்கும் தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ரூ.80.00 இலட்சம் தொகைக்கான வங்கி கணக்கு புத்தகம் தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டுச் சங்கம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

## இந்திய மருத்துவமுறை

சேலம் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்திய மருத்துவமுறை மருந்தகத்திற்கு தேவையான மருந்துகள் கொள்முதல் செய்வதற்கு **2014–15**ஆம் நடப்பு நிதியாண்டில் ரூ.**5.00** இலட்சம் பொதுநிதியிலிருந்து நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான மருந்துகள் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

## சுகாதார மேலாண்மை திட்டம்

இத்திட்டத்தின்கீழ் சேலம் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் மருத்துவ சேவைகளை, ஆரம்ப சுகாதார மையங்கள் மூலம் மாதந்திர அறிக்கை / வாராந்திர அறிக்கை தினசரி அறிக்கைகள் கணினியில் பதியப்பட்டு இணையதளம் மூலம் துணை இயக்குநர் சுகாதார பணிகள் அவர்களுக்கு அனுப்பிட பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு **9** நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களில் கணினி மற்றும் இணையதள இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ள **7** மையங்களுக்கு விரைவில் கணினி மற்றும் இணையதள இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு இச்சேவை விரிவுபடுத்தப்படவுள்ளது.

## தேசிய நகர்புற சுகாதாரத் திட்டம்

சேலம் மாநகராட்சியில் தற்போது செயல்பட்டுவரும் மருந்தகங்கள், நகர்நல மையங்கள், தாய்சேய் நலமையங்கள் மற்றும் துணை சுகாதார மையங்கள் ஆகிவற்றை ஒன்றிணைத்து அனைத்து தரப்பு மக்களும் மருத்துவ சேவையினை பெறும் வகையில் **2014–15**ம் நிதியாண்டில் சேலம் மாநகராட்சியிலும் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியில் துவங்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சியில் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குறிப்பாக குடிசைப் பகுதி மக்கள், சாலையோரம் வசிக்கும் குடும்ப உறுப்பினர்கள், வீடற்ற ஏழை எளியோர்களுக்கு தரமான மருத்துவ சேவைகள் வழங்குவதற்கும், அவர்கள் மருத்துவத்திற்காக மேற்கொள்ளும் செலவு தொகையை குறைப்பதற்கும், ஒவ்வொரு **50,000** மக்கள் தொகைக்கு ஒரு நகர்புற ஆரம்ப சுகாதார மையம் என்ற அடிப்படையில் சேலம் மாநகராட்சியின் **2011** மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **8,21,693** மக்கள் தொகைக்கு **16** நகர்புற ஆரம்ப சுகாதார மையங்கள் அமைத்திட திட்ட இயக்குநர், தேசிய நகர்புற சுகாதார திட்டம் அவர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஏற்கனவே இயங்கிவந்த மாநகராட்சி மருந்தகங்கள், நகர் நல மையங்கள், தாய்சேய் நல மையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் அமைந்துள்ள கட்டிடத்திலேயே நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படவும், ஒவ்வொரு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தேவையான மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், ஆய்வக உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் திட்ட இயக்குநர் அலுவலகம் மூலம் பணி நிரப்பப்பட உள்ளது.

சேலம் மாநகராட்சியை பொருத்தமட்டில் இத்திட்டத்தின் கீழ் அரிசிப்பாளையம், கிச்சிப்பாளையம், செவ்வாய்ப்பேட்டை, சுப்ரமணியநகர், கருங்கல்பட்டி, அண்ணா மருத்துவமனை, என்.ஜி.ஜி.ஓ. காலனி, ரெட்டியூர், பழைய சூரமங்கலம், அன்னதானப்பட்டி ஆகிய 10 மருத்துவமனை கட்டிடங்களை பராமரிப்புபணி செய்ய அரசு மானியமாக தலா ரூ.10.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.100.00 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது. மேற்படி இத்திட்டத்தின் கீழ் அஸ்தம்பட்டி, பொன்னம்மாபேட்டை, அம்மாபேட்டை, தாதகாப்பட்டி, குகை, பள்ளப்பட்டி ஆகிய 6 புதிய மருத்துவமனை கட்டிடங்கள் கட்டும் பணிக்கு அரசு மானியமாக தலா ரூ.42.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.252.00 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்திற்கும் தேவையான உபகரணங்கள் மற்றும் மருத்துவ சாதனங்கள் வாங்கி வழங்கிடவும், இதர மருத்துவ சேவைகளை அளித்திடவும், சேலம் மாநகராட்சியின் மாநகர நலச்சங்கம் கணக்கில் ரூ.73.35 இலட்சம் அரசிடமிருந்து வரவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறவேண்டும் என்ற பரந்த நோக்கில், மாநகராட்சி அளவில் மாநகராட்சி நல சங்கம் என்ற அமைப்பினை ஏற்படுத்தி, தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தினை சிறப்பான முறையில் செயல்படுத்திட, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான திட்ட நிர்வாக குழு (Governing Body) ஒன்றும், மாநகராட்சி அளவில் மாநகராட்சி ஆணையாளர் தலைமையில் திட்ட செயலாக்ககுழு (Executive Committee) ஒன்றும் அமைக்கப்பட்டு, மாநில திட்ட குழுவின் அறிவுரைகளின்படியும், வழிகாட்டுதலின்படியும் இயங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்திற்கும் நோயாளிகள் நலச்சங்கம் என்ற அமைப்பினை ஏற்படுத்தி நோயாளிகள் அம்மையங்களில் அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும், அவர்களுக்கு செய்து தரப்படவேண்டிய இதர வசதிகள் குறித்தும் விவாதித்து, இத்திட்டத்தின் வாயிலாக அளிக்கப்படும் மருத்துவ சேவையினை மேம்படுத்திக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்தை மேம்படுத்த கீழ்கண்ட சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

- புறநோயாளிகள் பிரிவு
- தொற்றா நோய்களுக்கான சிறப்பு புறநோயாளிகள் பிரிவு இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், கர்ப்பப்பை புற்றுநோய் மற்றும் இருதயநோய் கண்டறிதல்.
- சிறுநீர் மற்றும் இரத்தபரிசோதனைக்கான ஆய்வகங்கள்.
- மருந்து பிரிவு
- சிறுநீரக தொற்று மற்றும் பால்வினை தொற்று நோய்களுக்கான சிகிச்சை.
- காசநோய் மற்றும் தொழுநோய் சிகிச்சை பிரிவு.
- எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் பரிசோதனை மற்றும் ஆலோசனை பிரிவு.
- 24 மணி நேரமும் பிரசவ சேவைகள்.
- தகுதிவாய்ந்த பட்டயபடிப்பு முடித்த செவிலியர்களால் பிரசவம் பார்த்தல்.
- மகப்பேறு இறப்புகளை தடுத்தல் மற்றும் சிசு இறப்பு தடுத்தல்.
- கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல்.
- வெறிநாய்கடிகளுக்கான தடுப்பூசி போடுதல்.
- குடும்பக்கட்டுப்பாடு திட்டங்களை ஊக்குவித்தல் .

இதுபோன்ற மகளிர் நலன் காக்கும் பல்வேறு நலத்திட்டங்களை சீரிய முறையில் சேலம் மாநகராட்சியில் செயல்படுத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### பள்ளி நலம் நடமாடும் மருத்துவ வாகனம்

சேலம் மாநகராட்சி பொதுசுகாதார பிரிவின்கீழ் செயல்படவுள்ள தேசிய நகர்புற சுகாதார திட்டத்தில் – பள்ளி நலத்திட்டத்தின் கீழ், பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு பரிசோதனை மேற்கொள்ளவும், பிறவி ஊனம், இருதய நோய் குறைபாடு, கண்பார்வை குறைபாடு முதலியவற்றிற்கான சிகிச்சை மற்றும் இதர மருத்துவ சேவைகளையும் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தில் மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர், ஓட்டுநர், உதவியாளர், ஆகிய பணியிடங்களுக்கு, தொகுப்பு ஊதியத்தில் தலா ஒரு நபர் வீதம் தகுதியான நபர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மருந்து மாத்திரைகள் மற்றும் ஊதிய செலவினங்கள் மேற்கொள்ள ரூ.3.30 இலட்சம் நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது.

### தேசிய குடற்புழு நீக்கும் திட்டம்

2014–15 நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் பிப்ரவரி 10ம் தேதி குடற்புழு தினம் அனுசரிக்கப்பட்டு, அனைத்து அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூலமாக 1 வயது முதல் 19 வயது வரை அனைத்து பள்ளி செல்லும் குழந்தைகள் மற்றும் பள்ளி செல்லா சுமார் 1 இலட்சம் குழந்தைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்ய மாத்திரைகள் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2014–15 நடப்பு நிதியாண்டு முதல் 11 வயது முதல் 19 வயது வரையுள்ள மாணவ மாணவியர்களுக்கு பிப்ரவரி மற்றும் செப்டம்பர் மாதங்களில் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கி வருடத்திற்கு இரண்டு முறை தொடர் சிகிச்சை அளிக்கப்படும்.

### இரும்புசத்து மாத்திரைகள் வாரந்தோறும் வழங்குதல்

இரும்புசத்து மாத்திரைகள் வழங்குவதற்கு முன், ஒரு வருடத்திற்கு 2 முறை என்ற அடிப்படையில் குடற்புழு நீக்கம் செய்யப்படுவதால், இரும்புசத்து மாத்திரையில் உள்ள சத்துக்கள் அனைத்தும் இரத்தத்தில் முழு அளவில் ஈர்க்கப்படுகிறது. இதனால் இரத்த சோகை குறைபாட்டை நீக்க இரும்புசத்து மாத்திரைகள் வாரந்தோறும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும், மதிய உணவிற்கு பின் வகுப்பு ஆசிரியர்கள் மூலம் உட்கொள்ள வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் சுமார் 66,360 மாணவ/மாணவியர் பயன்பெறுகின்றனர். மாணவ மாணவியர்களுக்கு இரும்புசத்து மாத்திரைகள் வழங்க 2016 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## தொற்றா நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை திட்டம்

சேலம் மாநகராட்சி மருத்துவமனைகளில், அண்ணா மருத்துவமனை, அம்மாப்பேட்டை, தாதகாப்பட்டி நகர் நல மையம் மற்றும் பழைய சூரமங்கலம் மருந்தகங்களில் 30 வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் ஆகிய இருபாலருக்கும் இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை, மார்பகம் மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் மற்றும் இரத்தத்தில் கொழுப்பு கண்டறிதல் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் மாநகராட்சி மருத்துவர்கள், மருந்தாளுநர்கள் மற்றும் செவிலியருக்கு இரத்த அழுத்தம், சர்க்கரை நோய்களுக்கான மாத்திரைகள் வழங்குவது குறித்த பயிற்சி வழங்கப்பட்டு ஒவ்வொரு மையத்திலும் நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது.

## வைட்டமின் 'A' குறைபாடு சிகிச்சை திட்டம்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள 6 மாதம் முதல் 60 மாதம் வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும், ஒவ்வொரு 6 மாதத்திற்கும் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் அங்கன்வாடி மையம் மற்றும் மாநகராட்சி சுகாதார மையங்கள் மூலமாக வைட்டமின் 'A' திரவம் வழங்கப்படுகிறது. 1 வயது முதல் 5 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் 2 ml வைட்டமின் திரவம் வழங்கப்படுகிறது.

இச்சிகிச்சையினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பார்வை குறைபாடுகள், மாலைக்கண் நோய், ஆகியவற்றை தடுக்கப்படுவதுடன், குழந்தைகளுக்கு எதிர்ப்புசக்தி ஏற்படுத்தவும், வைட்டமின் 'A' திரவம் வழங்கப்பட்டு வருகிறது.

## பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் பணி

சேலம் மாநகராட்சியில் 2014ஆம் ஆண்டில் 28,848 பிறப்பு சான்றிதழ்கள் மற்றும் 9,739 இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது பொது மக்களிடமிருந்து பெயர் பதிவு மற்றும் பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்கக் கோரிய சுய விலாசமிட்ட தபால் உறையுடன் கூடிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் தயார் செய்து அன்றைய தினமே மனுதாரர்களுக்கு தபால் மூலம் வீட்டு முகவரிக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இத்திட்டம் பொது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

சேலம் மாநகராட்சியில் பொதுமக்களின் சேவைக்காக நான்கு வார்டு அலுவலகங்களிலும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்கும் சிறப்பு முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு முதற்கட்டமாக சூரமங்கலம் மற்றும் அஸ்தம்பட்டி வார்டு அலுவலங்களில் **08.01.2015** மற்றும் **09.01.2015** ஆகிய தேதிகளில் நடைப்பெற்ற முகாம்களில் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, **267** எண்ணிக்கையிலான சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்பட்டது. இத்திட்டம் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதால் எதிர்வரும் காலங்களில் சுழற்சி முறையில் நான்கு வார்டு அலுவலங்களிலும் இதுபோன்ற முகாம் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம்

நகர்புறங்களில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை மேம்படுத்தும் பொருட்டு, பொன்விழா ஆண்டு நகர்புற சுய வேலைவாய்ப்புத்திட்டமானது (SJSRY) கடந்த **1998–1999**ஆம் ஆண்டு முதல் **31–3–2014** வரை செயல்பட்டு வந்துள்ளது. சொர்ண ஜெயந்தி திட்டத்தில் அளிக்கப்பட்டு வந்த நலத்திட்ட உதவிகள் அரசின் கொள்கை முடிவிற்குட்பட்ட, சில மாறுதல்களுடன் தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டம் (NULM) என்ற புதிய திட்டமாக **2014–2015** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை எளியோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

சொர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ், நகர்புறங்களில் வசிக்கும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களை ஒருங்கிணைத்து அண்டை வீட்டுக்குழு (NHG) என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலம் அண்டை வீட்டு கமிட்டி (NHC) என்ற அமைப்பினை ஏற்படுத்தியும் இதனை ஒருங்கிணைத்து ஒரு சமுதாய மேம்பாட்டு சங்கமாக (CDS) அமைக்கப்பட்டது.

மேற்கண்டவாறு அமைக்கப்பட்ட குழுக்கள், வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கி, சேமிப்பு தொகை செலுத்தி, குழுவிலேயே உள்கடன் பெற்று, மற்றும் வங்கியிலும் கடனுதவி பெற்று தங்களுடைய தொழிலை மேம்படுத்திக் கொண்டும், மேலும் சிக்கனம் மற்றும் நாணயச் சங்கங்களாகவும் செயல்பட்டுவருகின்றன.

சொர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் செயல்பட்டுவந்த மேற்கண்ட குழுக்கள், தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு, ஏழை மக்களை மூன்றடுக்கு முறையில் ஒருங்கிணைக்கிறது.

- ✦ அடித்தளத்தில் சுய உதவிக்குழுக்கள் உள்ளன.
- ✦ குழுக்கள் ஒவ்வொரு பகுதியிலும் ஒருங்கிணைக்கப்பட்டு, பகுதி வாரியான இணையங்கள் அமைக்கப்படுகிறது.
- ✦ மேல் தட்டில், பகுதிவாரியான இணையங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, நகர்புற அளவிலான இணையம் அமைக்கப்படுகிறது.

தேசிய நகர்புற வாழ்வாதாரத்திட்டமானது கீழ்கண்ட கூறுகளை கொண்டுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது.

- ✦ சமூக திரட்டல் மற்றும் சமூக அமைப்பு வளர்ச்சி
- ✦ திறன் மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி
- ✦ சுய வேலை வாய்ப்புத் திட்டம்
- ✦ தனிநபர் கடன் வசதி.
- ✦ குழுக்கடன்வசதி.
- ✦ நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு உதவுதல் மற்றும் திறன் சார்ந்த பயிற்சி மூலம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல்
- ✦ நகரங்களில் வீடற்றவர்களுக்காக புகலிடம் அமைக்கும் திட்டம்
- ✦ நகர்புற தெருவோர வியாபாரிகளுக்கு உதவுதல்
- ✦ சமூக அமைப்பு வளர்ச்சிக்காக, குழுக்கள், பகுதி வாரியான இணையம், நகர்ப்புற இணையம் அமைக்கப்பட்டு, பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படுகிறது. சுயஉதவிக்குழுக்கள் பெண்களுக்கு அமைக்கப்படுவதோடு, மாற்றுத் திறனாளிகளாக இருக்கும் ஆண்களுக்காகவும் ஆண்கள் சுயஉதவிக்குழுக்கள் அமைக்கப்பட உள்ளது.

- தனிநபர் திறன் மேம்பாட்டுக்காக பயிற்சி வழங்கப்படுகிறது.

- நகர்புறங்களில், பாதிக்கப்பட்ட பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், சிறுபான்மையினர், பெண் குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பம் ஆதரவற்றோர், கைவிடப்பட்டவர், இயலாதவர்கள், தொழில்வழி பாதிக்கப்பட்டவர்கள், தெருவோர வியாபாரிகள் குப்பையிலுள்ள மறு சுழற்சிக்கான பொருட்களை சேகரிப்பவர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், பிச்சைக்காரர்கள், கட்டிடதொழிலாளர்கள் ஆகிய சமுதாயத்தில் பின் தங்கியவர்களுக்கு முன்னுரிமை அளித்து, திட்டங்கள் செயல்டுத்தப்படுகிறது.

- தனிநபர்கடன், மானியத்துடன் வழங்கப்பட்டு, சுய வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கிறது. குழுவாகச்சேர்ந்து சுய தொழில் செய்யும் வகையில், மானியத்துடன் கூடிய குழுக்களுக்கும் வழங்கப்படுகிறது.

- தெருவோர வியாபாரிகளை பயிற்சியின் மூலம் செயல்திறன் கொண்டவர்களாக்கி, சிறு நிறுவனங்கள் அமைய வங்கிக் கடன் ஏற்படுத்திக் கொடுத்தல், சேலம் மாநகராட்சியை பொருத்தமட்டில் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளைக் கண்டறிந்து அவர்களின் விபரங்களை சேகரித்து பதிவுசெய்தல் மற்றும் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் போன்ற பணிகளுக்காக சென்னையைச் சார்ந்த மெஸர்ஸ். இன்போமேப்ஸ் என்ற நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு கணக்கெடுப்பு பணிகள் முடிவடைந்துள்ளது.

### நகர்புறங்களில் வீடற்றவர்களுக்கான தங்குமிடம் அமைக்கும் திட்டம்

நகரங்களில் வீடற்றவர்களுக்காக தங்குமிடம் போதுமான அடிப்படை வசதிகளுடன் அமைக்கும் திட்டத்தின் கீழ், சேலம் மாநகராட்சி பகுதியில் ஏற்கனவே அன்னதானப்பட்டி பள்ளி வளாகத்தினுள் வீடற்ற **30** நபர்கள் தங்க வைக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றனர். மேலும் கூடுதலாக, சூரமங்கலம் வார்டு அலுவலத்திற்கு உட்பட்ட கோட்டம் எண்–**28**ல் சந்தைப்பேட்டை பகுதியிலும் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்–**16**ல் மார்க்கபந்து தெரு பகுதியிலும், அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்–**44**ல் குகை

எருமாப்பாளையம் மெயின் ரோடு பகுதியிலும், 3 எண்ணிக்கையிலான கூடுதல் தங்குமிடங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

- ✦ சேலம் மாநகராட்சி சார்பில் அரசு உத்தரவின்படி மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள், கண்காட்சி மற்றும் விற்பனை கடந்த 19.01.2015 முதல் 20.01.2015 வரை 2 நாட்கள் மாநகராட்சி நேருகலையரங்கில் நடத்தப்பட்டது.

- ✦ சேலம் மாநகராட்சி சார்பாக 21 சுய உதவிக்குழுக்கள் தங்களது உற்பத்திப் பொருட்களைக்கொண்டு இக்கண்காட்சியில் விற்பனை அங்காடிகள் அமைத்து 19.01.2015 மற்றும் 20.01.2015 ஆகிய இரு தினங்களில் ரூ.73,250 க்கு விற்பனை செய்து பயன் பெற்றுள்ளனர்.

### ஈமச்சடங்கு மானியம்

சேலம் மாநகராட்சியில் தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ், வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் வகுப்பினை சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் இறக்க நேரிட்டால் அவர்களது ஈமக்கிரியை செலவிற்காக ரூ. 2500/–வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பு நிதியாண்டில் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 13.00 இலட்சத்தில் சேலம் மாநகராட்சி நான்குவார்டு அலுவலகப்பகுதிகளிலும் இவ்வகுப்பினை சார்ந்த 213 நபர்களின் இறப்பிற்கு ரூ.5.325 இலட்சம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் வகுப்பினைச்சார்ந்த அனைவருக்கும் உடனடியாக இத்தொகை சேலம் மாநகராட்சியால் வழங்கப்பட்டு வருகிறது.

## பணிநியமனங்கள்

சேலம் மாநகராட்சியில் 2008ம் ஆண்டுக்கு பின்னர், நிர்வாக நலன் கருதி நகரமைப்பு பிரிவிற்கு என்று தனியாக செயற்பொறியாளர் (நகரமைப்பு பிரிவு) பதவி உருவாக்கம் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் நகரமைப்பு பிரிவு செயல்பட்டு வருகிறது.

சேலம் மாநகராட்சியில் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் வாயிலாக 2014–2015 ஆம் நிதியாண்டில் 2–எண்ணிக்கையிலான நகர சுகாதார செவிலியர் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசாணை(ப) எண்: 265, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந–5) துறை, நாள்:21.07.2014ன்படி 1–எண்ணிக்கையிலான செயல்திறனற்ற பணியாளர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சியில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்கள் மற்றும் மருத்துவ இயலாமை ஓய்வு பெற்ற பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணிநியமனங்கள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 8–எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது.

சேலம் மாநகராட்சியில் காலியாக உள்ள 4–எண்ணிக்கையிலான மருத்துவ அலுவலர் (அலோபதி) பணியிடங்களை நிரப்பிட சென்னை, செயல் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

சேலம் மாநகராட்சியில் காலியாக உள்ள 294–எண்ணிக்கையிலான பல்வேறு பணியிடங்களை நிரப்பிட அரசின் அனுமதி பெற நடவடிக்கையில் உள்ளது. அரசின் அனுமதி கிடைத்த உடன் காலி பணியிடங்கள் நிரப்பப்படும்.

## சத்துணவு மையங்கள் பராமரிப்பு

சேலம் மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 62 சத்துணவு மையங்களில் 2013–2014ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.12ல் உள்ள மணக்காடு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தென்புறம் உள்ள கட்டிடம் மற்றும் இருப்பறை கட்டிடம் கட்டும் பணி மற்றும் கோட்டம் எண்.14ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சகாதேவபுரம் துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியில் சமையலறையுடன் கூடிய இருப்பறை கட்டிடம் கட்டும் பணி மொத்த மதிப்பீடு தொகை ரூ.24.30 இலட்சத்தில் 3 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ.23.90 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி திட்டத்தின் வாயிலாக 450 குழந்தைகள் பயன்பெறுகின்றனர்.

## தேசிய திட்ட நிதி

சேலம் மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 62 சத்துணவு மையங்களில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி 2012–2013ம் நிதியாண்டில் தொடக்க கல்விக்கு ஆதரவளிக்கும் தேசிய திட்ட நிதியின் வாயிலாக எருமாபாளையம் நெ.1, மணக்காடு துவக்கப்பள்ளி, மாரிமுத்து தெரு துவக்கப்பள்ளி, ஆதிசெல்வன் தெரு துவக்கப்பள்ளி, குகை காளியம்மன் தெரு நடுநிலைப்பள்ளி, புத்துமாரியம்மன் கோவில் அருகில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, களரம்பட்டி நடுநிலைப்பள்ளி மற்றும் வையாபுரி தெரு உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் சமையலறையுடன் கூடிய இருப்பறை கட்டிடம் கட்ட மொத்த மதிப்பீடு தொகை ரூ.20.10 இலட்சத்தில் 8 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ.9.66இலட்சம் செலவில் 6 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 2 பணிகள் 31.03.2015ம் தேதிக்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். மேற்படி திட்டத்தின் வாயிலாக 1245 குழந்தைகள் பயன்பெறுகின்றனர்.

## ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன்

சேலம் மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பிரதிமாதம் NEFT (National Electronic Fund Transfer) மூலம் சம்மந்தப்பட்ட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் வங்கிக்கணக்கில் நேரடியாக சேர்க்கப்பட்டு வருகிறது.

சேலம் மாநகராட்சியில் மைய அலுவலகம் மற்றும் நான்கு வார்டு அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும், பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் 2014–15ஆம் நிதியாண்டில் ரூ. 224.00 இலட்சம் பணப்பயன்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள் இறக்க நேரிட்டால் ஓய்வூதியர்களின் வாரிசுகளுக்கு குடும்ப பாதுகாப்பு நிதியாக 21 நபர்களுக்கு மொத்தம் ரூ.10.10 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்கள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு ஓய்வூதியரின் மருத்துவ நலநிதியிலிருந்து மொத்தம் ரூ. 5.63 இலட்சம் காசோலையாக 18 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் 684 ஓய்வூதியர்களும், 715 குடும்ப ஓய்வூதியர்களும் மொத்தம் 1395 எண்ணிக்கையிலான நபர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 2014—2015ம் வருடத்தில் மேற்படி ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.1237.07 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மாநகராட்சியில் பணிக்காலத்தில் மரணமடைந்த பணியாளர்களுக்கு ஆயுள்காப்பீடு நிறுவனத்திலிருந்து தலா ரூ.1,50,000/— வீதம் 16 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு மொத்தத் தொகையாக ரூ.24.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு பரிசுகள் மற்றும் ஊக்கத்தொகை வழங்குதல் :**

சேலம் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையிலும் 2013—14ம் கல்வி நிதியாண்டில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ மாணவியர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.5000/— வீதமும் 2—வது பரிசாக தலா ரூ.3000/— வீதமும் 3—வது பரிசாக தலா ரூ.1000/— வீதம் மொத்தம் 8 மாணவ / மாணவியர்களுக்கு ஊக்கத்தொகையாகவும், நற்சான்றிதழும், சிறப்பு பரிசாக புத்தகங்களும் இந்திய சுதந்திர தின நாளான 15.08.2014 அன்று வழங்கப்பட்டது.

மேலும், மாநகராட்சி பள்ளிகளில் 10—ம் வகுப்பு மற்றும் 12—ம் வகுப்பு தேர்வுகளில் அதிக தேர்ச்சி சதவீதம் பெற்ற முதல் மூன்று மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் உயர்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பொன்னாடை அணிவிக்கப்பட்டது.

இம்மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் குழந்தைகளின் கல்வியினை ஊக்கப்படுத்தும் வகையில், 10ம் வகுப்பில் 400—மதிப்பெண்களுக்கு மேல் எடுத்த 31—மாணவ/மாணவியர்களுக்கும்,12—ம் வகுப்பில் 1000—மதிப்பெண்களுக்கு மேல் எடுத்த 11 மாணவ / மாணவியர்களுக்கும், நற்சான்றிதழும், சிறப்பு பரிசாக புத்தகங்களும் வழங்கப்பட்டது.

இப்பணி 2015—2016ம் நிதியாண்டிலும் தொடரப்படும்.

**கட்டுமான தொழிலாளர் நல நிதி**

சேலம் மாநகராட்சியில் 2014—2015ம் ஆண்டில் சாலைகள், வடிகால், சிறுபாலம் கட்டும் பணி மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கான வழங்கப்படும் செலவின பட்டியலில்

ஒரு சதவீதம் கட்டுமான தொழிலாளர் நல நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. மேலும், திட்டப் பிரிவு மூலம் கட்டிட அனுமதி வழங்கப்படும் பொழுது கட்டிட அனுமதி கோரும் மனுதாரர்களிடமிருந்து தொழிலாளர் நலன் நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி, 2014–15ஆம் ஆண்டு வசூலிக்கப்பட்ட கட்டுமான தொழிலாளர் நல நிதி ரூ.1,81,00,172/– தொகையினை அரசு இணைச்செயலாளர், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மின் கட்டணம்

**2014–15ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இம்மாநகராட்சியால் செலுத்தப்பட்ட மின்நுகர்வு கட்டண விவரம்.**

| வ. எண். | மின் பயன்பாடுகள் | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| 1. | தெருவிளக்குகள், மாநகராட்சி கட்டிடங்கள் மற்றும் நீர்தேக்க தொட்டிகள் | ரூ.10,61,55,372/– |
| 2. | சேலம் –மேட்டூர்(நங்கவள்ளி) குடிநீர் திட்டம் | ரூ.4,26,31,345/– |
| 3. | சேலம் மாநகராட்சி தனிக்குடிநீர் திட்டம் | ரூ.15,09,41,546/– |
| | **செலுத்தப்பட்ட மொத்த தொகை** | **ரூ.29,97,28,263/–** |

## தணிக்கை கட்டணம்

சேலம் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொதுப்பணிகள், திட்டப் பணிகள், சிறப்பு திட்டப்பணிகள் மற்றும் நிர்வாகம் சார்ந்த பணிகளை உடனுக்குடன் தணிக்கை துறையினரால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது.

மேற்காணும் ஆய்வு பணிக்கான தணிக்கை கட்டணமாக ரூ.18.97 இலட்சம் தொகையினை உரிய அரசு கணக்கு தலைப்பின் கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது.

## நூலக வரி

2014–15 ஆம் நிதியாண்டில் சொத்துவரி வருவாய் இனத்திலிருந்து வழங்கப்படும் நூலக வரி, ரூ.100.00 இலட்சத்தை சேலம் மாவட்ட மைய நூலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## கடன் செலுத்தப்பட்ட விவரம்:

2014–2015ம் நிதியாண்டில், இம்மாநகராட்சி சிறப்பு திட்டப்பணிகளுக்காக நிதியங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்கு செலுத்தப்பட்ட அசல் மற்றும் வட்டி விவரம்.

| வ. எண். | விவரம் | அசல் ரூ. இலட்சத்தில் | வட்டி ரூ. இலட்சத்தில் | செலுத்தப்பட்ட தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | தனிக்குடிநீர் திட்டம் (DWSS) | ------ | 355.48 | 355.48 |
| 2 | பாதாள சாக்கடை திட்டம் (UGSS) | ---- | 372.16 | 372.16 |
| 3 | குடிநீர் அபிவிருத்தி திட்டம் (WSPF) | 63.21 | 125.06 | 188.27 |
| | **மொத்தம்** | 63.21 | 852.70 | 915.91 |

அசல் ரூ.63.21 இலட்சமும், வட்டி ரூ.852.70 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.915.91 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

## 2014–2015
## ஏப்ரல் 2014 முதல் பிப்ரவரி 2015 வரை
## நடைபெற்ற மன்ற கூட்டங்களின் விவரம்

1. இயல்புக்கூட்டங்களின் எண்ணிக்கைகள் – 9
2. அவசரக்கூட்டங்களின் எண்ணிக்கைகள் – 9
3. சிறப்புக்கூட்டங்களின் எண்ணிக்கைகள் – 1
4. நிறைவேற்றப்பட்ட மொத்த தீர்மானங்கள் – 333

அமெரிக்க நாட்டின் ஆரகன் மாநிலத்தில் உள்ள சேலம் மாநகரத்தின் மதிப்பிற்குரிய **Madam Mayor Anna M. Peterson** அவர்கள் சேலம் மாநகராட்சிக்கு 03.12.2014ம் தேதி காலை 11.00 மணிக்கு வருகை புரிந்தார். அவரின் சேலம் மாநகர் வருகையினை சிறப்பிக்க மாண்புமிகு மேயர் திரு.எஸ்.சவுண்டப்பன் அவர்கள் தலைமையில் மாமன்ற சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

மேற்கண்ட சிறப்புக்கூட்டத்தில் **Madam Mayor Anna M. Peterson** அவர்கள், தாம் சேலம் மாநகராட்சிக்கு வருகை புரிந்தது மிகுந்த நெகிழ்ச்சியையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது எனவும், இரு சேலம் நகரங்களுக்கிடையே சகோதரி நட்புறவு அமைத்திட வேண்டி வந்துள்ளதாகவும், இரு நகரங்களுக்குமிடையே கல்வி, விவசாயம், கலாச்சாரம், பண்பாடு, வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்திட பாலமாக இருப்பேன் எனவும், தனக்கு வரவேற்பும், மரியாதையும் செய்த சேலம் மாநகராட்சி மேயர் உள்ளிட்ட அனைவருக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து மாமன்றத்தில் உரையாற்றியுள்ளார்.

சிறப்புமிக்க சேலம் மாநகராட்சி மாமன்றத்திற்கு அமெரிக்க நாட்டின் ஆரகன் மாநிலத்தில் உள்ள சேலம் மாநகரத்தின் மதிப்பிற்குரிய **Madam Mayor Anna M. Peterson** அவர்கள் வருகை புரிந்து சிறப்புரையாற்றியது சேலம் மாநகராட்சிக்கும், சேலம் மாநகர மக்களுக்கும் மிகுந்த பெருமையும், சிறப்பும் அளித்துள்ளது.

## புதிய திட்டங்கள்

- சேலம் மாநகராட்சியின் கோட்டங்கள் அறுபதாக உள்ளதை 72 கோட்டங்களாக விரிவுபடுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையப்பகுதிகளில் பொது மக்களின் பயன்பாடு அதிகமாக உள்ளதால், 24–மணி நேரமும் தூய்மை பகுதியாக பராமரிக்கப்படும்.

- மாநகராட்சி வருவாயினை ஈட்டும் வகையில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

    - காலி இடங்களை கண்டறிந்து வணிக வளாகங்கள் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் ஏற்படுத்தி வாடகை மற்றும் குத்தகை மூலம் வருவாய் அதிகரிக்கப்படும்.

    - நான்கு மண்டலங்களிலும் தொடர்ந்து வரிவிதிப்பு முகாம்கள் நடத்தப்படும்.

- சேலம் மாநகராட்சி வளர்ந்து வரும் மாநகராட்சி என்பதால், தற்போது தெரு விளக்குகள் பயன்பாட்டிற்கு மின்சார உபயோகம் கூடுதல் தேவையாக உள்ளது. மேற்படி மின்சார பயன்பாட்டிற்கு மின் கட்டணம் கூடுதலாக செலுத்த வேண்டியுள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு, முதற்கட்டமாக சூரிய ஒளியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்.

- கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் மாநகராட்சியின் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியருக்கு சிறப்பு பயிற்சி அளிக்க ஆசிரிய, ஆசிரியைகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்.

- சேலம் மாநகரில் சேகரம் ஆகும் திடக்கழிவுகளை, சுற்றுச்சூழல் மாசுபடா வண்ணம் நவீன விஞ்ஞான முறையில் அழிக்க, உரிய திட்டம் செயல்படுத்துதல்.

- சரக்கு வாகன நிலையம், மாநகரின் வெளிப்பகுதியில் நவீன முறையில் அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

- மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகளுக்கு Smart Board எனப்படும் கணினி பலகை வழங்குதல்.

- சேலம் மாநகராட்சியில் குடிநீர் திட்டத்தினை சீராக விநியோகம் செய்யும் பணியினை, கணினி மூலம் கண்காணித்து, செயல்படுத்திட SCADA என்ற திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

- தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் (National Urban Health Mission) சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மகப்பேறு மருத்துவமனை கட்டிடங்கள் மற்றும் அஸ்தம்பட்டி, பொன்னம்மாபேட்டை, அம்மாபேட்டை, தாதகாபட்டி, குகை, பள்ளப்பட்டி ஆகிய மருத்துவமனைகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுதல்.

- சேலம் மாநகராட்சி புதிய மைய அலுவலகம் கட்டும் பணிக்கு முதற்கட்டமாக மதிப்பீடு தொகை ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ் தளம், தரை தளம் மற்றும் முதல் தளம் பணிகள் நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக 2015–16ஆம் ஆண்டில் சேலம் மாநகராட்சி மைய அலுவலக கட்டிடத்தில் இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் அமைக்க ரூ.800.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்துதல்.

- போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளில் விபத்துகள் ஏற்படாமல் தடுக்க, முக்கிய சாலைகளில், சாலைகளை அகலப்படுத்தி, பாதசாரிகளுக்கு தனியாக நடைபாதை மற்றும் சுரங்க நடைபாதைகள் அமைக்க நகர் ஊரமைப்பு நிதி அல்லது தனியார் பங்களிப்புகள் மூலம் செயல்படுத்துதல்.

- மாநகரில் உள்ள மிக முக்கிய பேருந்து நிறுத்தங்களில் நவீன முறையில் ஆண்/ பெண் இருபாலருக்கும் தனித்தனியே கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்.

- ஆன்லைன் மூலம் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் முறையினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- மாவட்ட வருவாய் துறை சம்மந்தமான சான்றிதழ்கள் வழங்கும் பணியினை மாநகராட்சியின் நான்கு வார்டு அலுவலகங்களில் ஏற்படுத்துதல்.

- சேலம் மாநகராட்சி நான்கு வார்டு அலுவலகங்களிலும் தற்போது உபயோகத்தில் உள்ள குடிநீர் மின்மோட்டார்கள் பழுதுகளை உடன் சரிசெய்திடும் வகையில் நடப்பாண்டு செந்தாரவித விலைப்பட்டியல்படி ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நிர்ணயம் செய்து பழுது பணிகள் மேற்கொள்ளப்படும்.

- பொதுமக்கள் நலன் கருதி வார்டு அலுவலகத்திற்கு தலா ஒரு நடமாடும் மருத்துவ வாகனம் வீதம் நான்கு வார்டு அலுவலகத்திற்கு நான்கு நடமாடும் மருத்துவ வாகனம் வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

- சேலம் மாநகராட்சியில் பொதுமக்களின் நலன் கருதி மைய அலுவலக கணினி சர்வருடன் வளைதள இணைப்பு ஏற்படுத்தி பிறப்பு இறப்பு பதிவுகளை மேற்கொண்டு சான்றிதழ் வழங்க ஏதுவாக சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் 18, கோட்டம் 27, அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் 29, கோட்டம் 14, அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் 32, கோட்டம் 39 மற்றும் கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் 47 ஆகிய ஏழு துப்பரவு ஆய்வாளர் அலுவலகங்களில் புதியதாக மைய அலுவலக கணினி சர்வருடன் இணைக்கப்பட்ட வலைதள பதிவு வசதி நடப்பு நிதியாண்டில் ஏற்படுத்தி தரப்படும்.

## முடிவுரை

**மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின் படி, சேலம் மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியினை வழங்கி சிறப்பித்து வரும் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் தெற்கு தொகுதி, சேலம் மேற்கு தொகுதி மற்றும் சேலம் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் சேலம் மாநகராட்சியின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்குத் துணையாக இருக்கும் மரியாதைக்குரிய துணைமேயர் அவர்களுக்கும், மாநகராட்சி ஆணையாளருக்கும், மண்டல குழுத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர் மற்றும் மாநகராட்சியின் அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியின் கண்காணிப்புப் பொறியாளர் (திட்டம்) செயற்பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்) மாநகர் நல அலுவலர் (பொறுப்பு) , உதவி ஆணையாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும், மாநகராட்சிக்கு உதவியாக உள்ள மாநகர காவல் துறை ஆணையாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துப் பிரிவு காவல் துறையினருக்கும், பிற துறையை சார்ந்த அலுவலர்களுக்கும், செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சியினர் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த நிதி நிலை அறிக்கையை தயாரிக்க உறுதுணையாக இருந்த வரி மற்றும் நிதிநிலைக்குழுத் தலைவர் திரு.ஜெ.மாணிக்கம் அவர்களுக்கும் குழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதலின் படி, சேலம் மாநகர மக்களுக்கு பல்வேறு நலத்திட்டப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து, சேலம் மாநகரத்தை எல்லா வகையிலும், சிறப்பான,

செழிப்பான மாநகரமாக உருவாக்குவோம் என உறுதி அளித்து, இதற்கு உங்கள் அனைவரின் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சேலம் மாநகர மக்களுக்கு சேவை செய்ய எனக்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், சேலம் மாநகர மக்களுக்கும் மீண்டும் ஒரு முறை எனது பணிவான வணக்கத்தினையும், நன்றியையும் சமர்ப்பித்து இந்த நிதி நிலை அறிக்கை மீதான உரையை இத்துடன் நிறைவு செய்கிறேன்.

நன்றி
வணக்கம்.

சேலம்
நாள் : 30.03.2015

**எஸ். சவுண்டப்பன்,**
மாண்புமிகு மேயர்
சேலம் மாநகராட்சி

## சேலம் மாநகராட்சி
## 2014-2015 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
## வருவாய் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | சொத்து வரி | **2774.70** | 1. | மொத்த நிர்வாகச் செலவு | **6910.40** |
| 2. | தொழில் வரி | **604.72** | 2. | பொது பணிகள் | **2955.46** |
| 3. | கேளிக்கை வரி | **250.00** | 3. | குடிநீர் பராமரிப்பு | **2600.85** |
| 4. | முத்திரைத்தாள் கட்டணம் | **602.22** | 4. | மின்கட்டணம் | **1225.50** |
| 5. | சொத்துக்கள் மூலம் வரவு | **702.45** | 5. | தெருவிளக்கு பராமரிப்பு | **230.22** |
| 6. | குடிநீர் விநியோக வரவு | **2214.00** | 6. | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | **543.90** |
| 7. | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | **315.00** | 7. | நூலக வரி | **100.00** |
| 8. | கட்டணங்கள் மூலம் வரவு | **393.65** | 8. | வாகனங்கள் பராமரிப்பு | **423.90** |
| 9. | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | **6447.10** | 9. | கட்டிடங்கள் பராமரிப்பு | **75.50** |
| 10. | பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை | **240.50** | 10. | இதர செலவுகள் | **169.40** |
| 11. | இதர வரவுகள் | **690.79** | | | |
| | **மொத்த வரவினம்** | **15235.13** | | **மொத்த செலவினம்** | **15235.13** |

# சேலம் மாநகராட்சி
# 2014-2015 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
# மூலதனக் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | **57.30** | 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | **57.30** |
| 2. | உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி | **895.70** | 2. | உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி | **895.70** |
| 3. | பாதாள சாக்கடை திட்டம் | **580.00** | 3. | பாதாள சாக்கடை திட்டம் | **1201.90** |
| 4. | தனிக்குடிநீர் திட்டம் | **4245.00** | 4. | தனிக்குடிநீர் திட்டம் | **5170.80** |
| 5 | 13 வது நிதிக்குழு மானியம் | **910.50** | 5 | 13 வது நிதிக்குழு மானியம் | **910.50** |
| 6 | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | **1799.50** | 6 | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | **1799.50** |
| 7 | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | **1269.95** | 7 | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | **995.95** |
| 8 | பிளாஸ்ட்டிக் சாலை | **157.60** | 8 | பிளாஸ்ட்டிக் சாலை | **157.60** |
| 9 | திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம் | **201.32** | 9 | திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம் | **174.10** |
| 10 | மின் சேமிப்பு,மின் தணிக்கை (ESCO) | **2325.00** | 10 | மின் சேமிப்பு,மின் தணிக்கை (ESCO) | **400.00** |
| 11 | தேசிய நகர்புற சுகாதார திட்டம் | **352.00** | 11 | தேசிய நகர்புற சுகாதார திட்டம் | **352.00** |
| 12 | திருமணி முத்தாறு | **100.00** | 12 | தனி குடிநீர் திட்டம் (சாலை மறு சீரமைப்பு கட்டணம்) | **1002.04** |
| 13 | முதலீடுகள் திரும்ப பெறுதல் | **2408.69** | 13 | அம்மா உணவகம் | **456.00** |
| 14 | வைப்பு தொகை | **927.23** | 14 | கடன்கள் திருப்பிச் செலுத்துதல் | **1792.50** |
| | | | 15 | வைப்பு தொகை | **863.90** |
| | | | | | |
| | **மொத்தம்** | **16229.79** | | **மொத்தம்** | **16229.79** |
| | **ஆக மொத்த வரவினம்** | **31464.92** | | **ஆக மொத்த செலவினம்** | **31464.92** |

## சேலம் மாநகராட்சி
## 2015-2016 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## வருவாய் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | சொத்து வரி | **3257.00** | 1. | மொத்த நிர்வாகச் செலவு | **8500.00** |
| 2. | தொழில் வரி | **670.00** | 2. | பொது பணிகள் | **4000.00** |
| 3. | கேளிக்கை வரி | **300.00** | 3. | குடிநீர் பராமரிப்பு | **3300.00** |
| 4. | முத்திரைத்தாள் கட்டணம் | **750.00** | 4. | மின்கட்டணம் | **1600.00** |
| 5. | சொத்துக்கள் மூலம் வரவு | **772.00** | 5. | தெருவிளக்கு பராமரிப்பு | **400.00** |
| 6. | குடிநீர் விநியோக வரவு | **2650.00** | 6. | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | **900.00** |
| 7. | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | **400.00** | 7. | நூலக வரி | **300.00** |
| 8. | கட்டணங்கள் மூலம் வரவு | **544.00** | 8. | வாகனங்கள் பராமரிப்பு | **800.00** |
| 9. | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | **9000.00** | 9. | கட்டிடங்கள் பராமரிப்பு | **150.00** |
| 10. | குடும்ப நல நிதி | **530.00** | 10. | இதர செலவுகள் | **263.62** |
| 11. | பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை | **700.00** | | | |
| 12 | இதர வரவுகள் | **218.58** | | | |
| | **மொத்த வரவினம்** | **19791.58** | | **மொத்த செலவினம்** | **20213.62** |

# சேலம் மாநகராட்சி
# 2015-2016 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## மூலதனக் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | **100.00** | 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | **100.00** |
| 2. | பாதாள சாக்கடை திட்டம் | **1000.00** | 2. | பாதாள சாக்கடை திட்டம் | **1500.00** |
| 3. | தனிக்குடிநீர் திட்டம் | **1600.00** | 3. | தனிக்குடிநீர் திட்டம் | **9605.00** |
| 4 | திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி | **3369.00** | 4 | திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி | **3369.00** |
| 5 | 13 வது நிதிக் குழு மானியம் | **1000.00** | 5 | 13 வது நிதிக் குழு மானியம் | **1000.00** |
| 6 | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | **2000.00** | 6 | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | **2000.00** |
| 7. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | **1500.00** | 7. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | **1500.00** |
| 8. | பிளாஸ்டிக் சாலை | **125.00** | 8. | பிளாஸ்டிக் சாலை | **125.00** |
| 9. | இயற்கை பேரிடர் மேலாண்மை | **100.00** | 9. | இயற்கை பேரிடர் மேலாண்மை | **100.00** |
| 10. | புதிய அலுவலக கட்டிடம் | **800.00** | 10. | புதிய அலுவலக கட்டிடம் | **800.00** |
| 11. | திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம் | **100.00** | 11. | திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம் | **200.00** |
| 12. | உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி | **3000.00** | 12. | உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி | **3000.00** |
| 13. | பகுதி -2 திட்டம் | **100.00** | 13. | பகுதி -2 திட்டம் | **100.00** |
| 14. | நகர் ஊரமைப்பு துறை மானியம் பூங்கா அமைத்தல் | **138.00** | 14. | நகர் ஊரமைப்பு துறை மானியம் பூங்கா அமைத்தல் | **138.00** |
| 15. | நகர் ஊரமைப்பு துறை மானியம் நடைமேம்பாலம் அமைத்தல் | **115.00** | 15. | நகர் ஊரமைப்பு துறை மானியம் நடைமேம்பாலம் அமைத்தல் | **115.00** |
| 16. | மின் சேமிப்பு மற்றும் மின் தணிக்கை (ESCO) | **1925.00** | 16. | மின் சேமிப்பு மற்றும் மின் தணிக்கை (ESCO) | **1900.00** |
| 17. | வறட்சி நிவாரண நிதி | **200.00** | 17. | வறட்சி நிவாரண நிதி | **200.00** |
| 18. | குடிநீர் விநியோகம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி | **1605.00** | 18. | குடிநீர் விநியோகம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி | **1605.00** |
| 19. | வட்டியில்லா கடன் (பாதாள சாக்கடை திட்டம்) | **3400.00** | 19. | கடன் திருப்பி செலுத்துதல் | **2500.00** |
| 20. | கடன்கள் (தனி குடிநீர் திட்டம்) | **3005.00** | 20. | வைப்புத் தொகை | **982.50** |
| 21. | முதலீடுகள் திரும்ப பெறுதல் | **2900.00** | | | |
| 22. | வைப்புத் தொகை | **2452.60** | | | |
| | **மொத்தம்** | **30534.60** | | **மொத்தம்** | **30839.50** |
| | **ஆக மொத்த வரவினம்** | **50326.18** | | **ஆக மொத்த வரவினம்** | **51053.12** |

**பற்றாக்குறை 726.94**

## சேலம் மாநகராட்சி
## 2014-2015 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
## கல்வி நிதி

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | சொத்து வரியில் கல்வி வரி | **393.60** | 1. | பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் | **751.00** |
| 2. | தொழில் வரியில் கல்வி வரி | **151.22** | 2. | முதலீடுகள் செய்த தொகை | **190.23** |
| 3. | முதலீடுகள் திரும்பபெறுதல் | **400.00** | 3. | பள்ளி வாடகை | **0.80** |
| 4. | முதலீடுகள் மீதான வட்டி மற்றும் வங்கிகள் மூலம் வட்டி | **5.31** | 4. | 10 வது, 12 வது வகுப்பு இறுதித் தேர்வில் முதல் 25 இடம் பிடித்த மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, நிதியுதவி வழங்க நிதி ஒதுக்கீடு | **0.80** |
| 5 | புதிய மின் இணைப்பு அரசு மானியம் (அங்கன் வாடி) | **10.50** | 5. | சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி) | **9.40** |
| | | | 6. | புதிய மின் இணைப்பு அரசு மானியம் (அங்கன் வாடி) | **4.50** |
| | | | 7 | விளம்பர கட்டணம் | **3.00** |
| | | | 8 | 5 வது ஊதியக்குழு நிலுவை | **0.90** |
| | **மொத்தம்** | **960.63** | | **மொத்தம்** | **960.63** |

## சேலம் மாநகராட்சி
## 2015-2016 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## கல்வி நிதி

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | சொத்து வரியில் கல்வி வரி | **453.40** | 1. | பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் (2014-2015 ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு) | **230.00** |
| 2. | தொழில் வரியில் கல்வி வரி | **167.50** | 2. | பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் (2015-2016 ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு) | **350.00** |
| 3. | முதலீடுகள் மீதான வட்டி மற்றும் வங்கிகள் மூலம் வட்டி | **0.60** | 3. | பள்ளி வாடகை | **1.50** |
| 4. | புதிய மின் இணைப்பு அரசு மானியம் (அங்கன் வாடி) | **10.50** | 4. | 10 வது, 12 வது வகுப்பு இறுதித் தேர்வில் முதல் 25 இடம் பிடித்த மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, நிதியுதவி வழங்க நிதி ஒதுக்கீடு | **1.20** |
| | | | 5. | சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி) | **23.80** |
| | | | 6. | புதிய மின் இணைப்பு அரசு மானியம் (அங்கன் வாடி) | **20.00** |
| | | | 7 | விளம்பர கட்டணம் | **3.00** |
| | | | 8 | 5 வது ஊதியக்குழு நிலுவை | **2.50** |
| | **மொத்தம்** | **632.00** | | **மொத்தம்** | **632.00** |

## சேலம் மாநகராட்சி
## 2014–2015 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள்

**வருவாய் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 15235.13 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 15235.13 | இலட்சங்கள் |

**மூலதனக் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 16229.79 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 16229.79 | இலட்சங்கள் |
| **ஆக மொத்த வரவு** | **ரூ. 31464.92** | **இலட்சங்கள்** |
| **ஆக மொத்த செலவு** | **ரூ. 31464.92** | **இலட்சங்கள்** |

2014–2015 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பற்றாக்குறையான தொகை ரூ. 430.00 இலட்சங்களை மாநகராட்சியின் வருவாய் மற்றும் அரசு நிதியுதவிகள் மூலமாக சரி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2015 – 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட விவரங்கள்

**வருவாய் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 19791.58 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 20213.62 | இலட்சங்கள் |

**மூலதனக் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 30534.60 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 30839.50 | இலட்சங்கள் |
| **ஆக மொத்த வரவு** | **ரூ. 50326.18** | **இலட்சங்கள்** |
| **ஆக மொத்த செலவு** | **ரூ. 51053.12** | **இலட்சங்கள்** |
| **பற்றாக்குறை** | **ரூ. 726.94** | **இலட்சங்கள்** |

இந்த நிதி நிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறையை சேலம் மாநகராட்சியின் வருவாயை மேம்பாடு செய்தும், நிதி ஆதாரங்களை கூடுதலாகப் பெற்றும், பல்வேறு நடவடிக்கைகள் மூலமும் சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.